பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 25 சனிக்கிழமை (07.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:073

கோத்தபாய, பொன்சேகாவுக்கு எதிராக இன அழிப்புக் குற்றச்சாட்டு வழக்கு

அமெரிக்க நீதிமன்றில் முன்னாள் பிரதி சட்டமா அதிபர் தாக்கல்

வாஷிங்ரன், பெப்ரவரி7

இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்நாட்டின் இராணுவத் தளபதி லெப்.கேணல் சரத் பொன்சேகா ஆகிய இருவர் மீதும், அமெரிக்க நீதிமன்றத்தில் இன அழிப்புக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் சட்டத்துக்குப் புறம்பான 3,750 கொலைகளைச் செய்தும் 10,000 பேரை காய முறச்செய்தும் 13 லட்சம் மக்களை இடம்பெயர வைத்து அவலமுறச்செய்தும் குற்றமிழைத்துள்ளார்கள் என்பவை உட்பட பன்னிரெண்டு குற்றச்சாட்டுக்கள் அமெரிக்க சட்டமா அதிபரிடமும் நீதி அமைச்சிடமும் வியாழனன்று தாக்கல் செய்யப்பட்டன.

அமெரிக்காவின் இன அழிப்புக்குப் பொறுப்புக் கூறும் சட்டத்தின் (G.A.A) கீழ் இருவர் மீதான குற்றச்சாட்டுக்களையும் அமெரிக்காவின் முன்னாள் பிரதி உதவி சட்டமா அதிபர் புறூஸ் பெயின் தாக்கல் செய்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் நேற்று மாணவர் முன்னணி உண்ணாவிரதம்

கொழும்பு, பெப்.07

வன்னி மக்களைக் காப்பாற்றக் கோரி நேற்று கொழும்பில் சுதந்திர மாணவர் முன்னணி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

இப்போராட்டம் காலை எட்டு மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பம்பலப்பிட்டி (16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் நேற்றும் பீரங்கித் தாக்குதல் 48 பொதுமக்கள் பலி; 174 பேர் காயம்

கொழும்பு, பெப்.7

வன்னியில் நேற்றுப் பரவலாக நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் 48 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 174 பேர் காயமடைந்துள்ளனர் எனத் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து மேலும் அவற்றில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

முல்லைத்தீவு மாத்தளான் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட ஆட்லெறி பீரங்கித் தாக்குதலில் 5 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு தேவிபுரம் (16 ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அரசியல் தீர்வுக்கு முன் வர வேண்டும்

புலிகளிடம் கோருகிறார் சொல்ஹெய்ம்

புதுடில்லி, பெப்.7

இராணுவ ரீதியாக வெற்றிகொள்ள முடியாது என்பதை விடுதலைப் புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஆயுதங்களை கீழே வைத்து விட்டு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும்.

நோர்வேயின் சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள அவர் அங்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய பின் ஊடக வியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதலில் பதற்றத்தைத் தூண்டுகின்றது செஞ்.சங்கம்

இப்படிக் குற்றம் சாட்டுகிறது அரசாங்கம்

கொழும்பு, பெப்.7

வடக்கே விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்கள் தொடர்பில், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பதற்றத்தைத் தூண்டியுள்ளது - என்று இலங்கை அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னி மக்களைப் பாதுகாப்பது குறித்து பான் கீ மூன் – முகர்ஜி ஆலோசனை

புதுடில்லி,பெப்.7

இலங்கையில் காணப்படும் அரசியல் மற்றும் போர் நிலைமைகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீண்ட நேரம் விவாதித்ததாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கி மூன் கூறியுள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

இன்று தொடக்கம் 3 தினங்கள் தி.மு.கவும் எழுச்சிப் பேரணி

சென்னை, பெப். 07

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இன்றும், நாளையும், நாளை மறுதினமும் தி.மு.க. சார்பில் நடத்தப்படும் எழுச்சிப் பேரணி, பொதுக் கூட்டங்களுக்கு இளைஞர் அணியினர் (16 ஆம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவை நாட்டை விட்டுத் துரத்துங்கள்!

விமல் வீரவன்ஸ ஆவேசம்

கொழும்பு, பெப்ரவரி 07

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் கஸ்ட்டெலா புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, போல் கஸ்ட்டெலாவையும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவையும் உடனடியாக இலங்கையில் இருந்து வெளியேற்றுமாறு (2 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக இன்று தமிழகம் முழுவதும் கறுப்புக்கொடி ஊர்வலம்

சென்னை, பெப்.07

இலங்கைப் பிரச்சினைக்காக தமிழ் நாடு முழுவதும் இன்று கறுப்புக்கொடி ஊர்வலம் நடைபெறும் என்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஆலோசனைக்கூட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்னிஸ்டு மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, பா.ஜ.க மாநில பொதுச்செயலாளர் டாக்டர் தமிழிசை சவுந்திரராஜன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமா வளவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (02 ஆம் பக்கம் பார்க்க)

நாளை இடம்பெறும் இணுவையூர் உலகப்பெரு தைப்பூச மஞ்சத்திருவிழாவை வாழ்த்துவோர்

ஜீவி
பழரசச் தொழிலகம்
மானிப்பாய் வீதி, உடுவில்.
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

தரமான அரிசி வகை, தேயிலை வதை, கேக் தயாரிப்புப் பொருள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ அம்பாள் ரேடர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க பிரிட்டிஷ் எம்.பிக்கள் வற்புறுத்தல்

கொழும்பு, பெப். 07

இலங்கையில் யுத்த நிறுத்தம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இலங்கைக்கு எதிராகக் கடும் தடைகள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், பொதுநலவாயத்திலிருந்து இலங்கை இடை நிறுத்தப்பட வேண்டும் என்றும் பரவலான கோரிக்கைகளை பிரிட்டன் எம்.பிக்கள் முன்வைத்துள்ளனர்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற இலங்கை குறித்த விசேட விவாதத்தின் போதே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு பிரிட்டன் கொண்டு சென்று விவாதிக்க வேண்டும் எனவும், யுத்தக் குற்றங்களுக்காக சர்வதேச நீதி மன்றத்தில் நிறுத்தவேண்டுமென்றும் வலியுறுத்தும் வேண்டுகோள்கள் அங்கு விடுக்கப்பட் டுள்ளன.

வன்னி மக்களின் துயரங்கள் குறித்தும் பிரிட்டன் நாடாளுமன்ற உறப்பினர்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

மருத்துவமனைகள் தாக்கப்பட்டமை, பொதுமக்களின் உயிரிழப்பு போன்றவை குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையின் மனித உரிமை நிலைமையைக் கடுமையாகச் சாடியுள்ளனர்.

இலங்கை அரசைப் பொதுநலவாயத்திலிருந்து இடைநிறுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்றூ டிஸ்மோர், இலங்கை அரசு தொடர்ச்சியாகப் பல வாரங்களாக, மாதங்களாக மற்றும் வருடங்களாக மனித உரிமையை மீறி வருகின்றது, எனவே அதன்மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை பிரிட்டன் நிறுத்த வேண்டுமெனவும் அவர் நாடாளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசு பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுத்துள்ளதால் கண்ணுக்குத் தெரியாத மனிதாபிமான அவலம் உருவாகியுள்ளது என்றும் -

இலங்கையைப் பொதுநலவாய அமைப்பிலிருந்து இடைநிறுத்துவது குறித்து ஆராயுமாறும் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மக்டொனாக் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் கேட்டுக்கொண்டார்.

தொழிற்கட்சியின் நெய்ல்கெரார்ட் இலங்கைக்கு எதிராகத் தடைகள் குறித்துத் தீவிரமாக சிந்திக்க வேண்டு மென வேண்டுகோள் விடுத்துள்ள அதே வேளை, சுயேச்சை உறுப்பினரான அன்றூ பெய்லிங் இலங்கைக்கு ஐரோப் பிய ஒன்றிய நன்கொடைகளை நிறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அதேவேளை ஏனைய தடைகளும் அவசியம் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்க் கோரிக்கை விடுத்துள்ள பிரிட்டனின் தாராளவாத ஜனநாயகக் கட்சியின் எட்வேர்ட் டேவேய் சீனா போன்ற சில நாடுகள் இதனைத் தடை செய்ய முயலலாம் என எச்சரித்துள்ளார்.

(அ-சி)

வடக்கில் மாகாண சபைக் கொடி அடுத்த சுதந்திர தினத்தில் ஏற்றப்படும்

அமைச்சர் தேவானந்தா நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப்.7

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றது போன்று வடக்கிலும் விரைவில் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண அரசை நாம் உருவாக்குவோம்.

மத்தியில் கூட்டாட்சி என்ற எமது கொள்கைக்கு அமைவாக சுதந்திரதினத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்துள்ள நாம் மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கைக்கு அமைவாக அடுத்த சுதந்திரதினத்தில் எமது மாகாண சபைக்குரிய அங்கீ கரிக்கப்பட்ட கொடியினை ஏற்றி வைப் போம் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அப்போது மேலும் கூறியதாவது:

சுதந்திரம் என்பது எங்கள் பிறப்புரிமை. அதை மறுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வும் சம உரிமையும்பெற்ற சுதந்திரப் பிரஜைகளாக தமிழ் பேசும் எமது மக்கள் வாழ வேண்டும் என்பதே எமது அரசியல் கோட்பாடு. ஆயினும் புலித் தலைமையின் அடங்காத யுத்த வெறியினால் எமக்கு கிடைத்திருந்த அரிய சந்தர்ப்பங்கள் அனைத்தும் வீணாகிப் போய்விட்டன.

இதன் போது, 1948ல் சுதந்திரம் அடைந்த இலங்கைத் தீவில் 1958ல் ஓர் இனக்கலவரம் நடந்தமை குறித்தும் 1983ல் யாழ்ப்பணத்தில் 13பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்ட போது தென்னிலங்கையில் பெரும் இனக் கலவரம் மூண்டது. இவ் வாறான இனக்கலவரங்களுக்கு காரணமாக இருந்தவர்கள் தென்னிலங்கையில் மாறிமாறி ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருந்த அரச தலைவர்களே ஆவர் என்பது தெரிந்த உண்மையாகும். எனினும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் நமது நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய ஆட்சியிலும் புலித்தலைமையால் பாதுகாப்புப் படையினர் உட்பட அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப்படுகின்ற சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்ற போதிலும் இதன் தாக்கத்தினால் தென்னிலங்கையில் எந்தவொரு இனக்கலவரமும் நடந்ததாக இல்லை. இதற்கு ஜனாதிபதியின் வழிநடத்தலே காரணம்.

தற்போது காலம் மாறிவிட்டது என்றும் இது எங்கள் தேசம், எங்கள் அரசு. கடந்த 20வருடங்களாக தாம் வலியுறுத்தி வந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டு அதை மீண்டும் செயற்படுத்தத் தொடங்கியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் நடந்தது போல் விரைவில் வடக்கிலும் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண அரசை நாம் உருவக்குவோம். மத்தியில் கூட்டாட்சி என்ற எமது கொள்கைக்கு அமைவாக சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துள்ள நாம், மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கைக்கு அமைவாக அடுத்த சுதந்திரதினத்தில் எமது மாகாண சபைக் குரிய அங்கீகரிக்கப்பட்ட கொடியினையும் ஏற்றி வைப்போம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது - என்று கூறியுள்ளார்.

நயினையில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம், பெப்.7

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத் தைப்பூசத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலையில் 108 சங்காபிஷேகமும் வேத திருமுறை பாராயணம் என்பனவும் இடம்பெறவுள்ளன. அத்துடன் அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலாவருவார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்திரநந்தி (போக நந்தி), நிலையத்திறப்பு விழாவும் இடம் பெறவுள்ளது.

அடியார்களின் நன்மைகருதி விசேடமாக பேரூந்து படகு சேவைகளும் அன்னதானமும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக நயினை நாகபூசணி அம்மன் அறங்காவல் சபை தெரிவித்துள்ளது.

யாழ். நகர வாசகர்களுக்கு மட்டும்

கொசி ரெஸ்ரோரன்ஸ் இன்

விளம்பர அறிவித்தலை

உங்கள் முகவரிடம் கேட்டுப்

பெற்றுக்கொள்ளுங்கள்

செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அவரது கட்சித்தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பயங்கரவாதிகளை முற்றாக ஒழித்து அவர்களின் பிடியில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்காக எமது படையினர் போராடிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச நாடுகள் எமது நாட்டுக்கு எதிராகச் சதிமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

ஒருபுறம் இணைத்தலைமை நாடுகள் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றன. மறுபுறம் சில சர்வதேச அமைப்புகள் புலிகளைக் காப்பாற்றிவிட முற்படுகின்றன.

அந்த வகையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் கஸ்ட்டெலா புலிகளுக்கு ஆதாரவான வகையிலும் எமது படையினருக்கு எதிரான வகையிலும் அறிக்கைகளை வெளியிடுகின்றார்.

வன்னி மக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் என்று அவர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றார். அவரது கூற்றில் எந்த உண்மையுமில்லை.

எமது படையினர் புலிகளின் பிடியில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றவே யுத்தம் செய்கின்றனர். அவர்கள் மக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை.

ஆனால், போல் கஸ்ட்டெலா ஆதரமற்ற குற்றச்சாட்டுக்களை படையினர் மீது சுமத்துகின்றார். அவர் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்.

அவ்வாறான ஒருவரை நாட்டில் வைத்திருக்கக்கூடாது. அரசு அவரை உடனடியாக நாட்டிலிருந்து அனுப்பவேண்டும்.

அத்தோடு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவையும் இங்கிருந்து விரட்டிவிட வேண்டும். எமது மக்களுக்கு எமது அரசு போதுமான உதவிகளைச் செய்துவருகிறது - என்றார்.

(அ-சி)

இலங்கைத் தமிழருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய போராட்டங்கள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. பின்னர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் 7ஆம் திகதி (இன்று) தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து ஊர்களிலும் கறுப்புக்கொடி ஊர்வலங்கள் நடத்த உள்ளோம். இந்த ஊர்வலம் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் நடத்தப்படும்.

இலங்கைத் தமிழர்களுக்காக உயிர்த்தியாகம் செய்திருக்கிற முத்துக்குமார், ரவி ஆகியோரின் அஸ்தி கலசங்கள் 9, 10 ஆகிய திகதிகளில் பொதுமக்கள் வீரவணக்கம் செலுத்துவதற்காக, சென்னை, பூம்புகார், ராமேஸ்வரம், திருச்செந்தூர், குமரி, பவானி, முக்கூடல் ஆகிய 6 இடங்களுக்கு எடுத்து செல்லப்படும். 10ஆம் திகதியன்று சென்னையில் அனைத்து தலைவர்களும் கலந்துகொள்ளக்கூடிய மிகப் பெரிய பொதுக்கூட்டம் நடத்தப்படும்.

அதன்பிறகு செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பழ.நெடுமாறன், டாக்டர் ராமதாஸ், வைகோ ஆகியோர் கூட்டாக பதில் அளித்தனர். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி:- இலங்கை தமிழர்களுக்காக, தி.மு.க. சார்பில் ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்களே?

பழ.நெடுமாறன்:- நாங்கள் அதை போட்டியாக நினைக்கவில்லை. இலங்கை பிரச்சினையில் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகும் இந்திய அரசு எதுவும் செய்யவில்லை என்றவுடன் அவர் அடுத்த நடவடிக்கைக்கு வந்திருக்க வேண்டும்.

அவர் அதை செய்யாத காரணத்தினால். நாங்கள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரிலே அமைப்பை தொடங்கினோம்.

டாக்டர் ராமதாஸ்:- இப்போது குறிப்பாக, என் மீது முதலமைச்சர் பழி சொல்கிறார். எந்த வகையில் இந்த ராமதாஸ் அவர்களுடைய ஆட்சியை கலைப்பார். இந்த இயக்கம் எப்படி கலையும்? காங்கிரஸின் 35 பேரின் ஆதரவு இருக்கும் வரைக்கும் எப்படி அவருடைய ஆட்சியை யார் கலைக்க முடியும். நிச்சயமாக கலைக்க முடியாது.

பழ.நெடுமாறன்:- [illegible] அமெரிக்கா சொன்னாலும், இங்கிலாந்து சொன்னாலும், ஐ.நா சொன்னாலும் கூட அதை ஏற்க அவர் தயாரான மன நிலையில் இல்லை. முற்றிலுமாக இலங்கையில் வாழும் நம்முடைய தமிழர்களை அழித்து ஒழிக்கிற வெறியில் அவர் அந்த போரை நடத்திக் கொண்டிருக்கிறார்.

வைகோ:- இந்திய அரசே இலங்கைக்கு பக்க பலமாகவும், போரை நடத்த சொல்லிக் கொண்டும் இருக்கிறது. அதனால்தான் அமெரிக்காவோ, இங்கிலாந்தோ, உலக நாடுகள் சொன்னாலும், இந்திய அரசு போரை நிறுத்த ஒப்புக்குக்கூட சொல்ல தயாராக இல்லை.

கேள்வி:- முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்று கூறியிருக்கிறாரே?

பழ.நெடுமாறன்:- [illegible]ப்படி அவர் சொல்லியிருப்பது இலங[illegible]கத் தமிழர் பிரச்சினை பற்றி அவருக்கு எதுவும் தெரியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு. இலங்கையில் 60 ஆண்டுகாலமாக அறவழியில் போராடி, எதுவும் கிடைக்காத நிலையில், இராணுவ அடக்குமுறையை ஏவிவிட்டபோது அந்த மக்களைப் பாதுகாப்பதற்காக, இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள். விடுதலைப்புலிகள் மட்டும் இல்லாமல் போயிருந்தால் இலங்கையில் ஈழத் தமிழினமே முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது விடுதலைப்புலிகள் ஆயுதத்தை கீழே போடுவார்களேயானால், அடுத்த நிமிடம் ஈழத் தமிழினம் ஒழிக்கப்பட்டு விடும்.

கேள்வி:- தாம்பரம் விமானப்படை பயிற்சி மையத்திற்கு வந்த இலங்கை விமானப்படையினர் திரும்ப அனுப்பப்பட்டுள்ளனரே

வைகோ:- அவர்கள் திருப்பி அனுப்பப்படவில்லை. அவர்கள் 70 பேரும் இப்போதும் அங்கேதான் இருக்கிறார்கள்.

(அ-சி)

மரண அறிவித்தல்

சண்முகராசா இலங்கைநாதன்

(அன்னராசா- உரிமையாளர், அன்னராசா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா இலங்கைநாதன் நேற்று (06.02.2009) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா-அன்னமுத்து தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்ற கந்தசாமி-விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சசீதர் (அன்னராசா ஸ்ரோர்ஸ்), சசிகலா, சசிலதா, சசிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திரா (கல்வியற்கல்லூரி), குமணன் (ஆசிரியர், யா/முத்துத்தம்பி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

639/1 நாவலர் வீதி,
நல்லூர்.

தகவல்:
சசீதர் (மகன்).

மதன் எலக்ரோனிக்

✱ சகல வகை T.Vக்களும் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

✱ WEGA T.Vகள் (கீழ்பட்டின், Sony 21'' புதியது) இரண்டு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைக் சந்தி, மானிப்பாய்.
தொ.பே: 0776571156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

தமிழரின் நிரந்தர விரோதத்தை சம்பாதிக்கும் இராணுவப் போக்கு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு குறுகிய நிலப் பிரதேசத்துக்குள் பல லட்சம் தமிழர்கள் - சிவிலியன்கள் - சிக்குண்டுள்ள நிலையில், அப்பிரதேசம் மீதான தனது கொடூரத் தாக்குதலை நிறுத்த மறுத்து அப்பகுதி மீது தனது இராணுவ மேலாதிக்கக் கைவரிசையைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது கொழும்பு.

தினசரி பல நூறு பேர் கொல்லப்பட்டும், பல நூற்றுக்கணக்கானோர் அவயவங்களை இழந்து படுகாயமுற்றும் அந்தரிக்கும் மிக மோசமான மனிதப் பேரவலம் அங்கு கட்டவிழ்கின்றது.

நினைத்துப் பார்க்கவே கொடூரமான இந்நிலைமை பற்றிய தகவல்களை அறிந்து உலகமே - சர்வதேசமுமே - துடிதுடித்துக் கலங்கிப் பேரதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கின்றது.

ஆனால் புலிகளைக் கூண்டோடு அழித்து, தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனையை வேரோடு கறுவறுக்கும் வெறியில் நிற்கும் தென்னிலங்கை அரசு, மக்கள் பாதிப்பு - சிவிலியன் அவலம் - குறித்துக் கவலைப் படாமல், தனது இராணுவ இராட்சதத் தனத்தை வெளிப்படுத்தி, தமிழர் தம் சுதந்திர உணர்வு இலட்சியத்தை நசுக்கும் தீவிரத்தை ஒரேயடியாக வெளிப்படுத்தி வருகின்றது.

இவ்வாறு தமிழர்களின் குருதி இரத்த ஆறாக ஓடும் கொடூரம் குறித்து தென்னிலங்கையில் சிறிதும் அசுமாத்தம் இல்லை. புலிகள் அழிந்தொழியும் 'மகிழ்ச்சிகரமான' செய்தியைக் கேட்டு ரசித்தபடி, 'தேசத்தின் மகுடம்' என்ற பெயரில் அரங்கேறும் - இராணுவ 'மிதப்பை' பிரதிபலிக்கும் - கண்காட்சியைப் பார்த்து மகிழ்ந்து பெருமிதம் கொள்கிறது கொழும்பு.

அதேசமயம், முல்லைத்தீவில் கட்டவிழும் மனிதப் பேரவலக் கொடூரத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக சர்வதேச அரசுகள் முன்வைக்கும் யோசனைகள் அனைத்தையும் எடுத்த எடுப்பிலேயே - அடியோடு - நிராகரித்துத் தள்ளுவதிலும் கொழும்பின் போக்கு உறுதியாக இருக்கின்றது.

மரபு ரீதியான யுத்தத்தில் புலிகளின் பலத்தை சிதைத்து, நசுக்கி விட்டதாகக் கருதும் அரசுப் படைத் தரப்பு, அதோடு புலிகளின் கதி அதோ கதிதான், ஆட்டம் முடிந்துவிட்டது என்றும் கணக்குப் போடுகின்றது.

அதன் காரணமாக - சிவிலியன்களுக்கு எந்த இழப்பு வந்தாலும் அது குறித்துக் கவலைப்படாமல் - புலிகளின் கொட்டத்தை ஒரேயடியாக அடக்கி விடலாம் என்றும் அரசுத் தலைமை எண்ணுகின்றது.

ஆனால் அந்த எண்ணம் - நினைப்பு - வெற்றியளிக்குமா என்பதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

எனினும், இந்த முயற்சிக்காக - தமிழ்த் தேசிய உணர் வெழுச்சியை வேரோடு கறுவறுக்கும் தனது பேரினவாதச் சிந்தனையை நிறைவேற்றுவதற்காக - நூற்றுக் கணக்கில் தமிழர்கள் தினசரி படுகொலை செய்யப் பட்டு, அவயவங்களை இழந்து, படுகாயத்துக்கு உள்ளாகும் கொடூரத்தை இலங்கை அரசு கவலைப்படாமல் வெகு அநாயசமாகத் தனது தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது என்பதும் -

இதனால் லட்சக்கணக்கான தமிழர்கள் கொன்றழியும் பெருநாசம் தொடர்கிறது என்பதும் -

உலகத் தமிழினத்தின் மனதில் நிரந்தர ரணமாய் - ஆழமான வடுவாய் - பதிந்து விடும். எந்தக் கால ஓட்டத்திலும் மாற்றவோ, மறக்கவோ முடியாத கொடூர நினைவாகத் தமிழினத்தின் மூளையத்தை இந்த அடக்குமுறைக் கொடூரம் நிரந்தரமாகப் பற்றிநிற்கும்.

அத்தகைய மனப்பதிவால் எழுந்த குரோதமும், விகாரமும், அரசுப் படைகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற - மரபுவழி யுத்தத்தில் புலிகளைப் பின்னடையச் செய்கின்ற - இராணுவ வெற்றிகளால் - மறந்து - மறைந்துவிடப் போவதில்லை. அவை நிலைத்து, நீடித்து நின்று பழிவாங்கும் வெறியைத்தான் உள்ளூரத் தூண்டிவிட்டுக்கொண்டேயிருக்கும்.

அத்தகைய சூழலில் - மரபுவழி யுத்தத்தில் வெற்றி கொண்டதாகப் பெருமிதப்படும் தென்னிலங்கை அரசுத் தரப்பை, வேறு ஒரு வடிவில் அந்த ஆதங்கம் பாதிப்பை ஏற்படுத்தக்ககூடும்.

ஆகவே -

உலகையே உலுப்பும் வகையில் அரங்கேறும் மக்கள் பேரழிவைத் தவிர்ப்பதற்காக சர்வதேச சமூகத்தின் பல தரப்புகளும் முன்வைக்கும் சமரசத் திட்டங்களை ஒரேயடியாக நிராகரித்து இராணுவத் தைரியத்தில் போர் முரசு கொட்டும் கொழும்பு, அதன் மூலம் தான் சாதிக்க முயல்வது காலாதிகால வெற்றியல்ல என்பதை உணர்ந்து கொள்ளுமா?

இப்போது கொழும்பு எடுத்திருக்கும் இராணுவத் தீவிரத்தனம், தமிழர்களின் மனதை மீறமுடியாத ரணத்துக்குள் ஆழத்தும் கொடூரப் போக்கே. அது மரபு ரீதியான யுத்தத்தில் புலிகளை வெற்றி கொண்டதாகக் கருதித் திருப்திப்பட்டுக்கொள்ள சில சமயம் உதவலாம். ஆனால் தமிழர்களின் மனதை வெற்றிகொள்ள அது எந்த வகையிலும் உதவவே மாட்டாது. மாறாக, தமிழர்களின் நிரந்தர - வரலாற்று விரோதத்தை உறுதியாகவும், நிலையாகவும், சாசுவதமாகவும் சம்பாதிக்கவே வழி செய்யும்.

அத்தகைய விரோதத்தைத் தேடி சம்பாதிப்பது நிரந்தர சமாதானத்துக்கும் எதிர்கால அமைதிக்கும் ஆப்பு வைப்பதோடு, எதிர்காலத்தில் சிங்களத்துக்கே விபரீத விளைவுகளைத் தரக்கூடிய வித்தாகவும் மாறி விடலாம் அல்லவா?

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இருதரப்புகளிடமும் பிரான்ஸ் கோரிக்கை

சிவிலியன்கள் பாதிக்கப்படுவதை ஏற்கமுடியாதெனவும் தெரிவிப்பு

இலங்கையில் உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனப் பிரான்ஸ் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பல தசாப்தங்களாக நீடித்துவரும் போராட்டத்திற்கு அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலமே நிரந்தரத் தீர்வினை எட்ட முடியும் எனப் பிரான்ஸ் இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இணைந்து நாட்டின் அனைத்து குடிமக்களது உரிமைகளையும் பேணும் வகையில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாகப் பெருந்தொகையாக சிவிலியன்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பிரான்ஸ் அரசாங்கம் இது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான தீர்வொன்றின் மூலமே நிரந்தர சமாதானத்தை எட்டமுடியும்

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம்

நீண்டகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் ஊடாகவே நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும் என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்களினால் பொதுமக்களே பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் குறித்து மோதலில் ஈடுபட்டுவரும் தரப்பினர் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச போர் சட்ட விதிகளுக்கு அமைவாக யுத்தத்தை முன்னெடுக்குமாறு அரசாங்கப்படையினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்த பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்கு சிவிலியன் பாதுகாப்பாகச் செல்ல இரு தரப்பினரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் சிக்கியுள்ள பொதுமக்களது மனிதாபிமான தேவைகளை மதிப்பீடு செய்ய சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசியப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

250,000 பொதுமக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை தடையின்றி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பண்ணை-ஊர்காவற்றுறை பிரதான வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

பண்ணை- ஊர்காவற்றுறை வீதியில் புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் இந்தப் பிரதான வீதியின் திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தார் பற்றாக்குறை காரணமாக இந்த வீதியில் சேதமடைந்திருக்கும் பகுதிகள் மட்டும் தார் கலவை மூலம் செப்பனிடப்பட்டு வருகின்றன. (50-224)

மிருசுவில் நல்லூரி நிலையத்தில் அம்மைநோய் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்,பெப்.7

மிருசுவில் நல்லூரி நிலையத்தில் அம்மைநோய்(பொக்குளிப்பான்) ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை மூன்று பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோருக்கு பரவாமல் தடுக்க சுகாதாரத் திணைக்களத்தினர் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு விநியோகத்தால் நட்டம்: நிவாரணம் வழங்குமாறு சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.7

அண்மையில் உருளைக்கிழங்கு விநியோகத்தினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு நிவாரணம் பெற்றுத் தருமாறு சங்கங்கள் யாழ்.செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பல் மூலம் அண்மையில் எடுத்து வரப்பட்ட உருளைக்கிழங்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

யாழ்.செயலகத்தால் எடுத்துவரப்பட்டு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட இந்த உருளைக்கிழங்கில் பெரும் பகுதி மிகவும் மோசமாகப் பழுதடைந்திருந்ததாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சில சங்கங்களின் கிளைகளில் பழுதடைந்த உருளைக்கிழங்கு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சியங்களில் இருந்து பழுதடைந்த கிழங்குகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மூடை மூடையாக லொறிகளில் ஏற்றப்பட்டுக் காக்கைதீவுப் பகுதியில் கொட்டப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த உருளைக்கிழங்கு விநியோகத்தால் பல சங்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பழுதடைந்த கிழங்குகள் தொடர்பான விவரங்களைச் சங்கங்கள் யாழ்.செயலகத்திடம் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதனால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிவாரணம் வழங்குமாறு பாதிக்கப்பட்ட சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(50-224)

களனிப் பல்கலைக்கழகத்தில் இரு மாணவர் குழுக்கள் மோதல்

கண்ணீர்ப் புகையடித்து பொலிஸார் அடக்கினர்

கொழும்பு, பெப். 7

களனிப் பல்கலைக்கழகத்தின் இரு மாணவர் குழுக்களிடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட முறுகலை அடுத்து, அது பின்னர் மோதலாக வெடித்தது என்றும், அதனைப் பொலிஸார் கண்ணீர்ப்புகையடித்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் கலைப்பீட மாணவர் குழுக்களுக்கிடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் 5 பேரை பொலிஸார் கைதுசெய்திருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

எனினும், மோதல் ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

மோதலில் காயமடைந்த மாணவர்கள் சிலர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சொன்னார். (3)

கொமர்ஷல் வங்கியின் பரிசளிப்பு நாளை

யாழ்ப்பாணம்,பெப்.7

கொமர்ஷல் வங்கியின் "அருனலு" சேமிப்புக் கணக்கில் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பிடப்பட்டுள்ள கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (50-9)

நாளை

தை 26	08.02.2009 ஞாயிற்றுக்கிழமை
திதி:	சதுர்தசி பி.இ. 11.17 வரை
நட்சத்திரம்:	பூசம் பி.இ. 03.36 வரை
யோகம்:	சித்தயோகம்
ராகுகாலம்:	05.05 - 06.35

காலபோக நெற்செய்கையின் அறுவடை குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.7

குடாநாட்டில் தற்போது காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகிவுள்ளது.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு பிரதேசங்களில் உள்ள வயல்களில் காலம் முந்தி விதைப்பினை மேற்கொண்ட விவசாயிகள் தற்போது நெல்லை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளில் பெரும்பாலானோர் தைப்பூசதினமான நாளை ஞாயிற்றுக்கிழமை தமது நெல் வயல்களில் புதிர் எடுப்பதற்கு முடிவு செய்துள்ளனர். அதன் பின்னர் அவர்கள் நெல்லை அறுவடைசெய்வார்கள்.

தற்போது அறுவடையை மேற்கொள்ளும் விவசாயிகள் நாள்காரியம் பார்த்து நெல்லை அடுக்கி அவற்றைத் தைப்பூச தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை சூடு மிதிக்கவும் தயார் செய்து வருகின்றனர்.

மழை இல்லாமையால் பெரும்பாலான வயல்களில் விவசாயிகள் நீரை இறைத்து நெற்பயிர்களைப் பாதுகாத்து வந்தனர். எனினும் சில வயல்களில் நீர் இறைக்கும் வசதிகள் இல்லாமையால் அங்கு பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் நிறுவன ஏற்பாட்டில் நடந்த தொழிற்பயிற்சிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.7

கிளூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் தொழில் பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் பயிலுநர் செல்வன் பி.விஜிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமியும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், கரித்தாஸ் - கிளூடெக் நிறுவன இயக்குநர் அருட் திரு.கி.யோ.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பிரஸ்தாப நிறுவனம் சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடத்திய தொழில் பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்க இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (1)

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா - 2009

காலம்: 2009.02.09 திங்கட்கிழமை
நேரம்: முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை
இடம்: யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
தலைவர்: திருமதி அ.வேதநாயகம்
யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்
ட.இ.ச. சபைத்தலைவரும்

இசை ஆர்வலர்களை கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வ[illegible]கை சங்கீத சபை. தலைவர்

[illegible]பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பழைய உடற்கோப்பு விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

இசுசு லொறியின் பழைய உடற்கோப்பு (பொடி) கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வைப்புப் பணம் ரூபா 250.00ஐ சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தினை பெற்றுப் பூரணப்படுத்தி 2009.02.20ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் "பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம், மல்லாகம்" என முகவரியிட்டு தபால் உறையில் "பழைய உடற் கோப்பு கேள்விப் பத்திரம்" என குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

மரண அறிவித்தல்கள்

முருகேசு நடராசா (காரைநகர்)

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவுக்குளம், குருமண் காட்டினை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நடராசா நேற்று (06.02.2009) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மையின் அன்பு மகனும் செல்வமணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற கனகசபை மற்றும் இராசலட்சுமி, சுப்பிரமணியம் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவபாக்கியம்,பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலைவதனி, தவராணி, ஏரம்பமூர்த்தி, மனோகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுந்தரராசா (சிறி), லோகநாதன், தர்சினி, பத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வவுனியா தட்சாணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அ[illegible]னவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]வு, தகவல்:
[illegible]கர். சுந்தரராசா
(சிறி-மருமகன்)

R.P.வேலுப்பிள்ளை கருணானந்தன்

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை யைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட R.P.வேலுப்பிள்ளை கருணானந்தன் நேற்றுமுன்தினம் (05.02.2009) வியாழக்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R.P. வேலுப்பிள்ளை- செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், மதனாம்பாளின் அன்புக் கணவரும், அமரர் திருமதி தங்கரத்தினம் மற்றும் அருளானந்தன், சிவானந்தன், அமரர் திருமதி இரத்திநேஸ்வரி மற்றும் சர்வானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர் துரைச்சாமி மற்றும் திருமதி தர்மகுலபூசணா, தி[illegible] திலகவதியார், திருமதி சோதிமலர் ஆகியோரின் அ[illegible]மைத்துனரும், பசுபதிராஜா, கடம்பராஜா ஆகியோரின் [illegible]மனாரும், குமுதினி, வதனி, அனுஷா, சுதாகரன், சிவநிதி, பிறேமா, வாசுகி, வைஷ்ணவி ஆகியோரின் பெரியதந்தையும், மல்லிகா, மாலதி, ஞானேந்திரம், கிரிதரன், தில்லைச்செல்வன், ராஜ்மோகன், மோகனரூபன், ஸ்ரீவரதன் ஆகியோரின் மாமனாரும், துசியந், பிரசாந், கஜன், துளசிதன், கிருஷாணி, அனுஷாலினி, தி[illegible]ன், பிரியந்தி, றோஷ்மிற்ரா, கஷ்மிற்ரா, ஸ்ரீநவி, தனுஷன் [illegible]யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் [illegible] லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவீதி, தகவல்:
அராலி தெற்கு, [illegible]வானந்தன்
வட்டுக்கோ[illegible]டை. (ஓய்[illegible] பெற்ற அதிபர்)

கச்சாய் வீதியில் போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.7

சாவகச்சேரி சந்தியிலிருந்து கச்சாய் வீதிக்கு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்வரை அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததால் வாகனங்கள் இப் பகுதியால் போக்குவரத்து செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது.

கச்சாய் வீதி புகையிரதப் பாதை அருகில் அமைக்கப்பட்டிருந்த காவலரண் மீளப் பெறப்பட்டதையடுத்து வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக மாற்றுப் பாதைகளின் ஊடாக போக்குவரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது. (1-207)

தென்மராட்சியில் குழுநிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.7

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

காலை 8.30 மணி தொடக்கம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெறும்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளும் அன்றைய தினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(1-207)

விற்பனைக்கு

அன்னமையில் சினைப்படுத்தப்பட்ட நல்லின சனன் ஆடு 1/2 போத்தல் பால் எடுக்கக்கூடிய நிலையில் உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: மனோரன் மாஸ்டர்
அரசடி வீதி, தவாலி தெற்கு, மானிப்பாய்.

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

காணி விற்பனைக்கு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 4 பக்கச் சுவர், பெரியகேற், குழாய்க்கிணறு என்பவற்றுடன் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தரகர் தேவை இல்லை
இல.60, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 3898, 0776917030

புத்தகங்கள் விற்பனைக்கு

G.C.E A/L க்குரிய, பௌதிகவியல், இணைந்த கணிதம், புள்ளிவிபரவியல், நிகழ்தகவு, London A/L Past Paper பழைய சஞ்சிகைகள், நாவல்கள்,சமையல்ப்புத்தகங்கள், தமிழ்/ஆங்கில மொழிகளில் உடன் விற்பனைக்குண்டு.

பௌதிகவியல் ஆசிரியர்
R.பாலசுப்பிரமணியம் B.sc(cey)
42/1. இந்துக்கல்லூரி ஒழுங்கை
நீராவியடி, யாழ்ப்பாணம்.

Maruthi car for sale

Doctor's use Maruthi 800cc car mint condition; J series (Run 24000km), fixed prize 1050000.00 (one million & fifty thousand) S.Ramalingam, Navalar madam school view, Point pedro, Main road navalar madam Karaveddy. Inspect only sat., Sunday and public holidays.

2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 03★03★1945
மறைவு: 07★02★2007

அமரர்
ஆழ்வார் நாகராசா

என் ஆன்மா ஆண்டவரின் திருவசனத்தின் மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது.
என் ஆன்மா ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றது.
எம் நினைவுகளின் மூச்செல்லாம் நீங்கள் தான் அப்பா. மரணம், உங்களை மட்டுமே எடுத்துச் சென்றது - உங்கள் ஞாபகங்களை அல்ல. அப்பா நீங்கள் எப்போதும் எம்முடனே.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்,
[illegible]

மரண அறிவித்தல்கள்

திருமதி தவபுத்திரி இயேசுதாசன்

யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாரஹேன் பிற்றியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவபுத்திரி இயேசுதாசன் நேற்று முன்தினம் (05.02.2009) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சாமுவேல் தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற இயேசுதாசனின் அன்பு மனைவியும் தபேந்திரன் (கொழும்பு), குலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் எமலின் தவறஞ்சினியின் அன்புத் தாயாரும் ரொசான் கருணராசாவின் அன்பு மாமியாரும் சாமுவேல் பென்ஜமீன், செமாயடான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் விஜயதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் நோயல் விஜயரூபன் (தற்காலிக விரிவுரையாளர், பொறியியல் பீடம், பெரதெனியா), டானியல் ஜெயரூபன் (ஆசிரியர், செண்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.02.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பொறல்ல கனத்தை சேமக்காலையில் நல்ல டக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. 0777865512. தகவல்:
வி.டானியல் ஜெயரூபன் (பேரமகன்).

வல்லிபுரம் மயில்வாகனம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமாகிய வல்லிபுரம் மயில்வாகனம் (முன்னாள் உத்தியோகத்தர், புகையிரதத் திணைக்களம்) 02-02-2009 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் லட்சுமியின் கணவரும் கனடாவில் வசிக்கும் இராசகுலசூரியர், தர்மகுலசூரியர் ஆகியோரின் தந்தையாரும் சுமதி, பவானி ஆகியோரின் மாமனாரும் துஸ்யந்தன், துர்க்கா, தனுஷா, பானுஷா, ரஜிவ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற செல்லத்துரை, செல்வநாயகம், செல்வரத்தினம், சிவகாமிப்பிள்ளை, முத்தம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் அஞ்சலிக்காக (Leslie & Elginmills) சந்திப்பில் அமைந்துள்ள Funeral home இல் (1591 Elgin mills road - east, ritchmond hill) 08.02.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 முதல் 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அதே மண்டபத்தில் ஈமக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்மார்,
இராஜகுலசூரியர் - (416) 630 5126, (647) 280 5126
தர்மகுலசூரியர் - (416) 321 1842, (416) 822 9162

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் சின்னத்துரை

(கொட்டடி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இல.15, மல்லிகா ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 இல் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் சின்னத்துரை 05.02.2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கணபதிப்பிள்ளை அழகம்மாவின் மருமகனும் இராசசெல்வமணியின் (பேபி) கணவரும் காலஞ்சென்றவர்களாகிய நவரத்தினம், இராசரட்ணம் மற்றும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரரும் சியாமளா (வாசுகி), காலஞ்சென்ற சிவகுமாரன் (வனில்) ஆகியோரின் தந்தையும் பரமநாதனின் (நாதன்களஞ்சியம், யாழ்ப்பாணம்) மாமனாரும் லவநாதன் காலஞ்சென்ற குசநாதன், மற்றும் நிஷநாதன், கௌசிநாதன் ஷாமினி ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 08.02.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00மணிக்கு மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 8.00மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 9.00மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சி.பரமநாதன் தகவல்:
இல.15 மல்லிகா [illegible]ழுங்கை, குடும்பத்தினர்.
வெள்ளவத்தை கொழும்பு -06. தொ.பே: 0771916743

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலிவுற்றோர் நிவாரணம் சண்டிலிப்பாயில் விநியோகம்

சித்தங்கேணி,பெப்.7

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பண்டத்தரிப்பு, மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக ஜனவரி மாதத்திற்கான நலிவுற்றோர் நிவாரணம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. (203-112)

தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பயிற்சிநெறிகள்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் சிங்கள மொழியில் சான்றிதழ் பயிற்சியும், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்லூரியில் ஜி.சீ.ஈ.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 2 பாடங்கள் சித்தியடைந்தவர்களுக்கான உயிரியல் டிப்ளோமா பயிற்சியும் நடைபெறவுள்ளது. இதற்கான பட்டப் பயிற்சிநெறி இருவருடங்கள் இந்தியப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்குமாறு தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ந.யோகராஜன் அறிவித்துள்ளார். (203-204)

வெள்ளஅழிவு நிவாரணத்தை பெற்றுத் தருமாறு கோரிக்கை

கோப்பாய்,பெப்.7

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வருட இறுதிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த பயிரழிவு, வீடழிவுகளின் மதிப்பீட்டுப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

• இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள், தமது நஷ்டஈட்டுக் கொடுப்பனவை மிக விரைவில் பெற்றுத்தருவதற்குச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் ஆவன செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளையில்-பல பகுதிகளிலும் மக்கள் தமது வீடுகளை பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் மீள் புனரமைப்பைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (203-72)

மூத்த பிரஜைகள் பேரவையின் அலுவலகத் திறப்பு விழா

நாவற்குழி,பெப்.7

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் அலுவலகத் திறப்பு விழா அடுத்த மாதம் 10ஆம் திகதி கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் யாழ்.அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தப் பேரவையின் வருங்காலச் செயற்றிட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்ற நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளை யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் அனைவரும் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகளை யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை, 95, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம்திகதி உதயன் பத்திரிகை ஊடாக இணைப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்த கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து, ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைச் செயலாளர் லயன் வ.பரமசிவம் அறிவித்துள்ளார். (204-288)

ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் பாடசாலை அதிபர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் ''ஊடகக்கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்'' என்ற பொருளில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலிகாமக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சிக் கல்விப்பணிப்பாளர் வீ.செல்வராஜா, தென்மராட்சிக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தீவகம் கல்விப்பணிப்பாளர் பி.வி.இராதாகிருஸ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா தொடக்கவுரையை ஆற்றவுள்ளார்.

கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன், யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.

இந்தக்கருத்தரங்கு கடந்த 28 ஆம் திகதி நடைபெறவிருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-204)

4 ஆயிரத்து 500 புசல் நெல்லைச் சேமிக்கக் கூடிய

விதைநெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் கட்டட வேலைகள் ஒருமாதத்தில் பூர்த்தியாகும்

நல்லூர்,பெப்.7

திருநெல்வேலி விவசாய திணைக்களத்தில் அமைக்கப்பட்டுவரும் விதைநெல் உற்பத்தியாளர் சங்கக் கட்டட வேலைகள் ஒரு மாதத்துக்குள் பூர்த்திசெய்யக்கூடியதாக இருக்கும் என யாழ்ப்பாணம் விவசாய திணைக்கள (விரிவாக்கம்) பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:-

கட்டுமானப்பணிகள் பூர்த்தியடைந்தும் 4 ஆயிரத்தி 500 புசல் விதைநெல் சேமிப்பில் வைக்கக் கூடியதாக இருக்கும்.

2009 - 2010ஆம் ஆண்டு காலபோகத்திற்கு உற்பத்தியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட விதை நெல் வழங்கக் கூடியதாக இருக்கும். குடாநாட்டு விதை நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் ஒப்பந்தக் கமக்காரர்கள் 100 பேர் உள்ளனர். 120 ஏக்கர் நிலத்தில் இவர்கள் விதைநெல் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

விதைநெல் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் ஒப்பந்தக் கமக்காரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

விதைநெல்லை விவசாயத் திணைக்கள விரிவாக்கம் ஆராய்ச்சி மற்றும் விதைநெல் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ள விதைநெல்வயல்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (203-111)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம்

கோப்பாய்,பெப்.7

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலி, சிறுப்பிட்டி கிராமங்களை மையப்படுத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் இப்பகுதி முதியோர்களால் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் முதியோர் பேரவைத் தலைவர் ஏ.சி.ரி.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

முதியோர் பராமரிப்பு நிலையத்திற்கென நீர்வேலிப் பகுதியில் தனியான கட்டடமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அமைக்கப்படவுள்ள இப்பகல் பராமரிப்பு நிலையத்தில் வீடுகளில் இருக்கும் முதியோர் பகல்நேரங்களில் வந்து நாளிதழ், சஞ்சிகைகள் வாசித்தல், கூடிக்கதைத்தல், வானொலி, தொலைக்காட்சி வசதிகளைப் பயன்படுத்தல் மூலம் மகிழ்ச்சியான சூழலைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தனிமை உணர்வு நீங்குதல், மனச்சோர்விலிருந்து விடுபடும் தன்மை என்பன ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தைச் செயற்படுத்த நீர்வேலிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல கொடையாளர்கள் உதவ முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அச்சுவேலிப் பிரதேசத்தை மையப்படுத்தியதாக முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்டட வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

சாந்திகத்தால்முதியோருக்கு உணவல்லாத பொருள்கள்

கோப்பாய்,பெப்.7

சாந்திகம் நிறுவனத்தால் வலி.கிழக்கு பிரதேச செயலர்பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள முதியோர்கள் 250 பேருக்கு உணவல்லாத பண்டங்கள் கடந்த திங்கட்கிழமை சிறுப்பிட்டி கிழக்குப் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

வாளி, பாய், படுக்கை விரிப்பு, துவாய், லாம்பு, வெந்நீர்போத்தல், நுளம்புவலை என்பவற்றுடன் ஆண் முதியோருக்கு சேட், பெனியனும், பெண் முதியோருக்கு சேலை, ஏனைய உடுதுணிகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-72)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் சிமெந்து விநியோகம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் பொதுத்தேவை மற்றும் தனிப்பட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கு சிமெந்து விநியோகம் செய்யப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

சிமெந்து தேவையானவர்கள் கிராம சேவை யாளரின் சிபார்சுடன் விண்ணப்பிக்குமாறு அவர் மேலும் கூறியுள்ளார். (203-112)

திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனத்திற்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் ஆகிய பிரிவுகளில் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 30 வயது தொடக்கம் 58 வயதுக்குட்பட்ட, ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் பிரதேச செயலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து அனுப்புமாறு அந்தந்தப் பிரதேச செயலர்கள் அறிவித்துள்ளனர். (204)

ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொண்டோருக்கு பணவைப்புப் புத்தகங்கள்

கோப்பாய்,பெப்.7

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திற்கு முன் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதித்திட்டத்தில் இணைந்து கொண்ட 704 பேருக்குரிய பணவைப்புக்கான புத்தகங்கள் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

உரியவர்கள் தத்தம் கிராம அலுவலர் அல்லது சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-72)

நிர்வாகத்தைத் தெரிவுசெய்யுமாறு ச.ச. நிலையங்களுக்கு அறிவுறுத்து

வடமராட்சி,பெப்.7

பருத்தித்துறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் புதிய ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவினை இந்த மாதத்திற்குள் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்னிலையில் நடத்திமுடிக்க வேண்டுமென சபையின் செயலாளர் ச.சந்திரயோகன் அறிவித்துள்ளார்.

பொதுக்கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகத்தெரிவு கூட்ட அறிக்கையையும், கணக்கு அறிக்கையினையும் சனசமூக நிலையங்கள் பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

கடந்த வருடத்திற்கான சனசமூக நிலைய நன்கொடைப் பணம் வழங்கப்படவிருப்பதால், சனசமூக நிலையங்களின் வங்கிக்கணக்கு உட்பட தேவையான விவரங்களை தாமதமின்றி அனுப்பிவைக்குமாறு சனசமூக நிலையங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-236)

ஊரெழு கணேச வித்தியாசாலையில் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையோடு புதிதாக அமைக்கப்பெற்ற சமையல்கூடம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. உலக உணவுத்திட்ட யாழ்.மாவட்டப் பணிப்பாளர் பிரான்சிஸ் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் பெயர்ப்பலகையை யாழ்.கல்வித்திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் திரைநீக்கம் செய்துவைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

அதிபர் பணிமனையைப் புனரமைப்புச் செய்து வழங்கிய இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.குலசிங்கம் பணிமனையை நாடாவை வெட்டித் திறந்துவைப்பதை மூன்றாவது படத்திலும் பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனத்தொகுதியை அன்பளிப்பாக வழங்கிய எஸ்.ஜெயக்குமார் அவர்களின் பாரியார், பாடசாலை அதிபர் சி.திரிகரன் அவர்களிடம் அவற்றைக் கையளிப்பதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trinity College & University Representation Office Sri Lanka

முக்கிய அறிவித்தல்

எமது மேற்படி பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் மற்றும் புதிய கல்வி ஆண்டிற்கான மாணவர் அனுமதிகள் யாவும் 01/02/2009 தொடக்கம் யாழ் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள,

UNI TECHNOLOGY-ICT EDUCATION TRAINERS

கணனி நிறுவனத்தில் மட்டுமே நடைபெறும் என்பதை அனைத்து மாணவர்களுக்கும் அறியத்தருகின்றேன். யாழ் மாவட்டத்தில் மேற்படி நிறுவனத்திற்கு மட்டுமே இதற்கான முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அனைத்து மாணவர்களும் மேற்படி நிறுவனத்திற்கு சென்று எமது பட்டப்படிப்பினை தொடரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்து மாணவர்களும் எமது பல்கலைக்கழகத்தின் Students Registry Application Form இனை மேற்படி நிறுவனத்தில் இருந்து உடன் பெற்றுக்கொள்ளவும்.

Please Call Jaffna District Coordinator -Mr.Selvathas(North)
0777 - 110862 / 060 - 221 - 6433

மிக விரைவில் | தரமான | வைத்திய சேவை

யாழ்.பிரதான வீதியில் உள்ள
"பிலிப்ஸ் நேசிங் ஹோம்"
"PHILLIPS Nursing Home"

தனது மகத்தான சேவையினை மிகவும் தரமான முறையில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்க இருக்கின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எமது சிறப்பான சேவைகள்:-

- வெளி நோயாளர் பிரிவு
- இரத்தம், சிறுநீர், மலம், சளி பரிசோதனை
- வார்ட் (Ward) வசதிகள்
- சிறு சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் ஆலோசனை

*பொது மருத்துவம் *சத்திர சிகிச்சை *என்பு முறிவு நெரிவு சிகிச்சை *மகப்பேற்று வைத்தியம் *காது, மூக்கு, தொண்டை வைத்தியம் (ENT)*குழந்தை வைத்தியம் *உள்ளக மருந்தகம்(Indoor Pharmacy).

அனைத்தும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் நடத்தப்படும்.

மரண அறிவித்தல்

திருமதி வயித்தி ஞானம்மா

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வயித்தி ஞானம்மா நேற்று (06.02.2009) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்பு வயித்தியின் அன்பு மனைவியும், அற்புதம்(ராசா), சத்திய நேசன், லோறன்ஸ்(இலங்கை மின்சார சபை), சிறில்(சுவிஸ்), மாக்கிறெட் (ஆசிரியர்), ரெஜினா ஆகியோரின் அன்புத் தாயும், விக்டர், கருணைதாசன், கபில், ரஞ்சிததேவி, பத்மாபதி(ஆசிரியர்), மீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், Sr.டொறத்தியின் (திருச்சிலுவை கன்னியர் மடம் யாழ்.) பாசமிகு மைத்துனியும், டென்சி, நிலோஜன், மென்டிஸ், டேமியா, பிறின்ஸி, கரின், பவுலின், ஜெஸ்ரோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.02.2009) சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலியுடன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
லோறன்ஸ் (துரை)
மகன்.

மானிப்பாய் பொதுநூலகத்தில் சிறுவர் பிரிவு ஆரம்பம்

ஆனைக்கோட்டை,பெப்.7

மானிப்பாய் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கென தனிப்பிரிவு ஆரம்பிக்கப்பட இருப்பதாக நூலகர் தெரிவித்தார்.

இதற்கென நூலகக்கட்டடத்துடன் இணைந்ததாக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் அது திருத்தப்பட்டு வருவதாகவும் திருத்த வேலைகள் முடிந்ததும் விரைவில் சிறுவர்களுக்கான தனிப்பிரிவு செயற்பட ஆரம்பிக்குமெனவும் அவர் கூறினார்.

அத்துடன் சிறுவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய கல்வி சம்பந்தமான தொலைக்காட்சி சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

ஓய்வுநாள்களில் இவை இடம் பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-20)

வலுவிழந்தோருக்கு சுயதொழில் உதவி

கேப்பாய், பெப்.7

வலுவிழந்தோருக்கான தேசிய செயலகம் 18 தொடக்கம் 60 வயது வரையுடைய அங்கவீனமுற்றோருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் நன்கொடையை வழங்கி வருகிறது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இந்தவருடம் இதுவரை 16 பேர் இத்திட்டத்தில் உதவி பெற விண்ணப்பித்துள்ளனர்.

இந்த உதவியைப்பெற விண்ணப்பிப்போர் அரச மருத்துவமனையில் பெற்ற வலுவிழந்தோருக்கான சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (203-72)

மணிவிழா மலர் வெளியீட்டு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள செ.சிவநடராசாவின் மணிவிழா மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் ஏழாலை முத்தமிழ் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி என்.பிரதா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை சிவஸ்ரீ க.சபாபதி சர்மா நிகழ்த்துவார். (9)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளான **ரா.பவித்ரா [3 E], ரா.லக்ஷி [1 E]** ஆகியோரின் பாசமிகு தாய் இறைபதம் எய்தியமையை அறிந்து அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
சங்கீத பூஷணம் நாகம்மா கதிர்காமர்

அன்னை மடியில் 21.12.1932 | இறைவன் அடியில் 07.01.2009

எமது சிறு பராயம் முதல் சங்கீத ஞானத்தையும்
அறிவையும் மிக்க அக்கறையுடன் ஊட்டிய தாயே!
எமக்கு சங்கீதத்துடன் எம் வாழ்கை வளம் பெற
கண்டிப்புடன் வழிகாட்டிய அன்னையின் உருவே!
எமது துக்கத்தையும் சந்தோசத்தையும்
எமது குடும்பத்தில் ஒன்றாகப் பகிர்ந்த அன்பின் கடலே!
நீங்கள் எம்மை விட்டுச்சென்றாலும் எம்முள் ஏற்றிய சங்கீத ஒளி இன்று எட்டுத் திக்கிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. உங்களது சங்கீதம் என்றும் உங்கள் நினைவுடன் எம்முடன் வாழும்.

உங்கள் ஆன்மா சாந்தியடை யப் பிரார்த்திக்கும்
நன்மகிப்புக்கும் பேரன்பிற்குமுரிய மாணவர்கள்
ரதன் & ரத் (பன்னாலை, தெல்லிப்பழை)

Hatton National Bank

அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல் லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.12.2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 14.02.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

★கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

★தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி.

மரண அறிவித்தல்கள்

கந்தையா இராசரத்தினம்

சங்குவேலி தெற்கு,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் (வெள்ளை அப்பா-ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்கள அலுவலர்) 05.02.2009 வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

திருமதி அபூர்வசிங்கம் அன்னபூரணம்

இல.17, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபூர்வசிங்கம் அன்னபூரணம் நேற்று முன்தினம் (05.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அபூர்வசிங்கத் தின் (முன்னாள் ப.நோ.கூ.ச.முகாமையாளர்) அன்பு மனைவியும், கருணாகரன், விஜயலக்ஷ்மி (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன், ஞானசேகரம் (ஜேர்மனி), குணசேகரன், விஜயகுமார்(டென்மார்க்), விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், தேவகி, அமுதராணி (கொலன்ட்), ஜெயம்(ஜேர்மனி), யமுனாதேவி, நளினி (டென்மார்க்), ஜெய்சங்கர், நடராஜா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (06.02.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17, அன்ன சத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
அ.ஸ்ரீகாந்தன் (மகன்)

திருமதி மகேஸ்வரி சுந்தரமூர்த்தி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி சுந்தரமூர்த்தி (03.02.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (வனபரிபாலன உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), இரத்தினேஸ்வரி, குணேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவஞானம், மகாலிங்கம்(பாலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மசீலன் (பிரான்ஸ்), சத்தியசீலன், ஜெயசீலன் (லண்டன்), மணிலால்தேவி, சாந்தினி, காலஞ்சென்ற குணசீலன், சுகந்தினி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராணி(பிரான்ஸ்), நாகேஸ்வரி(கனடா), ராகினி (லண்டன்), பத்மநாதன்(பிரதி அதிபர், யாழ் .மத்திய கல்லூரி), தவராஜா (உதவிப் பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம், மன்னார்), யாழினி (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆரணி, அர்ஜின், ரவிசங்கர் (பொறியியலாளர்), சிவ்சங்கர், திவ்யா, பிரதீபன், ஜனனி, திவாகரன், வாகினி, கிரிசாந், கஜசாந், டிக்ஷன், டிலக்ஷினி, டிலானி, வனிஷா ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பத்மநாதன் (மருமகன்)
நற்பகப் பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

இல. 15, இராமகிருஷ்ண அவெனியு,
கொழும்பு-6.

கந்தர் சண்முகம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தாவடி வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கந்தர் சண்முகம் நேற்று (06.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.02.2009) சனிக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி வீதி, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்விக்கூறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கனியூட் பெனற் சிங்கர்

3ஏ (புனித பத்திரிசியார் கல்லூரி)

எத்தனையோ கல்லூரிகள் என்னை வழிப்படுத்தியிருந்த போதும் அன்னையாம் புனித பத்திரிசியார்கல்லூரி என்னை உலகறிய உயர்த்தியது என்பதை நான் பெருமையுடன் நினைத்துக் கொள்கின்றேன்.

நான் உயர்தரத்திலே என் விருப்பத் தெரிவாக தமிழ், அளவையியல், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களைத் தேர்ந்து எடுத்துக் கற்றேன். எனது ஆசிரியர்கள் எப்போதும் எனக்கு உற்சாகமூட்டி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள். கடின உழைப்பும் விசுவாசமும் என் இலக்கை நோக்கி நான் பயணிக்க அடிப்படையாக அமைந்தது. கடின உழைப்பு என்பது நான் 3ஏ எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சோர்வு, தூக்கம் என்பவற்றை மறந்து படித்தேன். விசுவாசம் என்பது நான் கடவுள் மீதும், ஆசிரியர்கள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையும் என் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் என்மீது கொண்டிருந்த நம்பிக்கையுமே ஆகும்.

பல நூல்களைத் தேடிக் கற்றேன். எனது பெற்றோரின் கஸ்ரங்கள் என்னை மேலும் மேலும் திறமையாகப் படிக்கத் தூண்டின. கடந்தகால வினாப்பத்திரங்களையும் ஏனைய பாடசாலைகளின் வினாப்பத்திரங்களையும் ஆசிரியர்களின் துணையுடன் மீட்டல் செய்து படித்ததால் எனக்குப் பரீட்சை பற்றிய பயம் இல்லாமல் போனதுடன் கேட்கப்படும் வினாக்களுக்கும் என்னால் தெளிவுற உரிய நேரத்தில் விடையளிக்க முடிந்தது.

நான் வெற்றிபெற உதவியாயிருந்த கல்லூரித்தாய், அதிபர், ஆசிரியர்கள், குருமட அதிபர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பும், படங்களும்: ஒளுஜ்யன், கவிநேசன், ம.பா.மகாலிங்கசிவம், மோன்னுத்துரை, தருப்பகன் 14

சிவராசா சிவரூபன்

பெறுபேறு: 3ஏ (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

உயர்தரத்தில் புவியியல், தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். 3ஏ பெறுபேறு எதிர்பார்த்தேன். அத்துடன், மாவட்ட நிலை எட்டு என்றதும் மனதிற்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது.

விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு எனக்கு உண்டு உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து மாகாண மட்டம் வரை அந்த அணி தெரிவு செய்யப்பட்டது. தமிழ்த் தினப் போட்டிகளில் விவாத அணியிலும் பங்குபற்றியுள்ளேன். மாவட்டமட்டம் வரைக்கும் விவாதப் போட்டிக்குச் சென்றேன்.

எனக்கு மனதிற்குப் பிடித்த நேரங்களில் பாடரீதியாக குறிப்பெடுத்துப் படிப்பேன். என்னுடைய இத் தகைய பெறுபேற்றிற்கு எனது பெற்றோர் மற்றும் எமது கல்லூரியின் அதிபர் சிவனேஸ்வரன். பாட ஆசிரியர்கள் அனைவரும் தங்களது முழுமையான பங்களிப்பை வழங்கினார்கள்.

எதிர் காலத்தில் புவியியல்துறை விரிவுரையாளராக வரவேண்டும் என்பது எனது எதிர்கால இலட்சியம். அதையும் சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

துவாரகா சிவகுருநாதன்

பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

கரணவாய் தாமோதர வித்தியாசாலையில் எனது ஆரம்பக் கல்வியை முடித்து உயர்கல்வியைக் கற்க தரம் 6இல் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இணைந்தேன்.

எனது வகுப்பு மாணவர்களிடையே போட்டி நிலை காணப்பட்டது. அதில் வெற்றி பெறவேண்டும் என்ற சவாலோடு படித்து வெற்றி கண்டேன். நான் சிறப்பான பெறுபேற்றினை அடைவதற்கு பாடத்தெரிவுகளும் முக்கியமான காரணமாக இருந்தன. தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் எனும் பாடங்களைத் தெரிவு செய்தேன். கடந்த கால வினாத்தாள்கள் மூலம் அதிகம் பயிற்சி பெற்றுக் கொண்டேன். என்னால் இயலக்கூடிய வரையில் சிறந்த வினாக்களைத் தெரிவு செய்து அதில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

பரீட்சையினை நான் சிறப்பாக எழுதியிருந்த போதும் பெறுபேறு குறித்த திட்டவட்டமான முடிவு எதனையும் என்னால் எடுக்க முடியவில்லை. நான் இரவு வேளையிலே அதிகம் கண் விழித்துப் படிப்பேன். இந்தப் பெறுபேற்றை அறிந்ததுமே மிகவும் சந்தோஷமாக இருந்தது.

எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் சிறந்த பெறுபேற்றினை பெறுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தனர்.

இரசனையும், பரந்த வாசிப்புத் திறனுமே ஒருவருடைய அறிவு மேலோங்கக் காரணமாக இருக்கின்றது. என்பதை உணர்ந்து கொண்டேன். கலைப்பிரிவை நான் தெரிவு செய்ததே இத்தகையதொரு வெற்றிக்கு காரணம் என நான் அறிந்து கொண்டேன். இத்தகையதொரு பெறுபேற்றினை நான் பெற்றுக் கொண்டதில் கடவுளின் அருளும் இருந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சிவசுப்பிரமணியம் நவேதா

பெறுபேறு: 3ஏ (கரவெட்டி குமரசாமியார் கல்லூரி)

எனது சொந்த ஊர் எழுதுமட்டுவாழ், மிருசுவில் என்பதால் ஆரம்ப வகுப்பு முதல் தரம் 6 வரை யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்றேன். 2001 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, கரவெட்டியில் இயங்கிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் தரம் 7ஐயும் பின் ஞானாசாரியார் கல்லூரியில் தரம் 8முதல் உயர்தரம் வரை கற்றேன்.

உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் கற்க முடிவு செய்து தமிழ், அளவையியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். நான் மூன்று பாடங்களிலும் அதிசிறப்புப் பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவியோர் பலர். வறுமையைப் பொருட்படுத்தாது என் கல்விக்கு ஊக்குவித்த பெற்றோர், பாடசாலை அதிபர், கற்பித்த ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலும், அறிவுரைகளும் பேருதவியாக இருந்தன. எனவே, அவர்கள் யாவருக்கும் முதலில் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக் கக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன், உயர்பெறுபேறு பெற வேண்டும். பல்கலைக் கழகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அவாவினாலும், பெற்றோரின் கனவை நனவாக்க வேண்டும் என்ற ஓர்மத்தினாலும் விடாமுயற்சியுடன் கற்றேன். என் முயற்சிக்கு உரிய பலன் கிடைத்ததால் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இதற்கு மனித செயற்பாட்டிற்கும் அப்பால் இறைவன் அருளும் ஆசியும் கிடைத்தது என்றே நம்புகின்றேன்.

எனவே படிக்கும் மாணவர் முயற்சியுடன் செயற்பட்டால் எதிலும் வெல்லலாம். முயற்சி திருவினையாக்கும். எதிர்காலத்தில் நான் ஓர் ஆசிரியராகி சிறப்பாகக் கடமையாற்றி என் போன்ற வசதியற்ற மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்வதே என் குறிக்கோளாகும்.

நிரோசனா சுந்தரலிங்கம்

பெறுபேறு: 3ஏ (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லதொரு பெறுபேறுதான். எனக்கு 3ஏ என்றவுடன் படித்ததற்கேற்ற பலனைப் பெற்றுவிட்டோம் என்ற எண்ணம் என் மனதில் உதித்தது. நான் எனது ஆரம்பக் கல்வியை ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பயின்றேன். பின்னர் 6 தொடக்கம் ஜி.சீ.ஈ. [சா/த] வரையான வகுப்புகளை யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் பயின்றேன். எனது உயர்கல்வியை யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியைத் தெரிவு செய்து பயின்றேன். அங்குள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போர் எனக்கு ஆதரவாக செயற்பட்டனர். அவர்களுடைய ஆக்கமும், ஊக்கமும் எனது இப்பேறுபேற்றுக்கு காரணம் எனலாம்.

நான் சங்கீதம், வரலாறு, இந்துநாகரிகம் என்ற பாடங்களைத் தெரிவு செய்து படித்தேன். வரலாறு என்ற பாடத்துக்காக தனிப்பட்ட ரீதியில் சென்று படித்தமையின் காரணமாக எனக்கு அப்பாடம் மிக இலகுவாக இருந்தது. வரலாறு என்ற பாடத்தைக் கற்பித்த திருமதி உமாசுதன் ஆசிரியைக்கும், இந்து நாகரிகம் கற்பித்த சிவபாலன் ஆசிரியைக்கும், சங்கீத பாடத்தினைக் கறிபித்த ஆசிரியை சந்திரிகாவுக்கும் எனது நன்றியினைக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன். இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு பாடசாலை அதிபர் மிக முக்கிய காரணம் என்று கூறலாம். கற்கும் காலத்தில் படிப்பிலேயே கவனத்தையும் செலுத் தினேன். எனது இப்பெறுபேற்றுக்கு பெற்றோர், சகோதரன், சகோதரி என்பவர்களினதும் மற்றும் உறவினர்களினதும் உதவி பேருதவியாக இருந்தது.

செல்வராஜா குகப்பிரியா

பெறுபேறு: 3ஏ (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியை யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் தொடங்கி தரம் 7 இலிருந்து யா/ மகாஜனக் கல்லூரியில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். எனது குடும்பத்தின் சூழ்நிலை காரணமாக உயர் தரத்தில் கலைத்துறையினைத் தெரிவு செய்து அளவையியல், தமிழ், நாடகமும் அரங்கியலும் போன்ற மூன்று பாடங்களையும் தெரிவுசெய்தேன். 5 சகோதரிகளைக் கொண்ட எனது குடும்பத்தைத் தந்தை கூலி வேலை செய்து பராமரித்தார். நான் படிப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து எந்தக் குறையும் இல்லாமல் எனது தாய் என்னைப் படிப்பித்தார். எனது தாய், தந்தையின் ஆசை நான் பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் என்பதே. அவர்களது கனவினை நனவாக்க வேண்டும் என்று நினைத்துப் படித்து இப்பெறுபேற்றினைப் பெற்றேன். நான் இரவு வேளைகளில் கண் விழித்திருந்து படிக்கும் போது என்னுடன் கூடவே விழித்திருந்து உதவி புரிந்த எனது அம்மா எந்தக் குறைகளும் இல்லாமல் எவ்விதக் குழப்பத்தையும் தராது உதவி செய்த சகோதரரிகள் ஐவரதும் ஊக்குவிப்பும் எனது பெறுபேற்றிற்குக் காரணமாகும். எனது தனியார் கல்வி நிலையக் கட்டணத்தை தான் பிடிப்பித்து தனது சம்பளத்தைத் தந்து கட்ட வைத்த எனது அக்காவிற்கு நான் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது பாடசாலை ஆசிரியர்களாயினும் சரி, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களாயினும் சரி என் மேல் நம்பிக்கை கொண்டு என்னை ஊக்குவித்ததற்கு எனது மனமார்ந்த நன்றிகள். நான் பாடத் தெரிவினை மேற்கொண்ட போது அப்பாடங்களை எடுத்தால் நியமப் புள்ளி குறைவடையும் என்றார்கள். ஆனால் நான் அளவையியல் ஆசிரியரிடம் இப்படிச் சொன்ன போது அவர் சொன்னார். அதிகூடிய புள்ளிகள் பெற்றால் நல்ல நியமப் புள்ளி பெறமுடியும் என்றார். அவ்வார்த் தையை மந்திரமாகக் கொண்டு படித்து மாவட்ட நிலையில் 27ஆம் இடத்தினைப் பெற்றேன்.

இதே போல மற்றைய பாட ஆசிரியர்களும் நான் கேட்காமலே இந்தப் புத்தகத்தைப் படி என்று சொல்லி பல புத்தகங்களைத் தந்து ஊக்குவித்தனர். எனவே அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக இருந்து சமூகத்தில் என்னைப் போல படிப்பதற்கு வசதியின்மையாக இருக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்க வேண்டும் என்பதாகும்.

விஜயகுமார் விமலகுமார்

பெறுபேறு: 3ஏ (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

என்னுடைய விடாமுயற்சியும் மனதை ஒருமுகப்படுத்திக் கற்கும் திறனுமே சிறப்பான பெறுபேற்றை அடைவதற்குத் துணையாக இருந்தன.

நான் நன்கு படித்த பாடப்பரப்புக்களில் இருந்தே அனேகமான வினாக்கள் வந்தன. இதனால் மிக எளிதாகப் பரீட்சைசையை நான் எதிர்கொண்டேன்.

எமது பாடசாலையில் உள்ள நூலகத்தையும் நான் சரிவரப் பயன்படுத்திக் கொண்டேன். இதனால் ஆசிரியர் கற்பித்ததை விடவும் பன்முகத்தன்மையுடன் நான் விடையளிக்க முடிந்தது.

எனக்குப் பாடங்களைப் போதித்த ஆசிரியர்கள், நல்வழிகாட்டிய அதிபர், எனக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர் என்போர் என்னுடைய இச்சாதனையின் பங்காளிகள் என்பதே உண்மையாகும்.

எதிர்காலத்தில் எனது கல்வியின் மூலம் சமூக முன்னேற்றத்துக்கு உதவ ஆசைப்படுகின்றேன்.

குணரத்தினம் ஜெயமோகன்

பெறுபேறு: 2ஏபி (யாழ்.இந்துக் கல்லூரி)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பக்க ல்வி கற்று தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். ஆரம்பத்திலிருந்தே கணிதத் துறையில் ஈடுபாடு இருந்தமையால் கணிதத் துறையைத் தெரிவு செய்தேன். ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் 5ஏ4பிஎஸ் சித்தியைப் பெற்றேன். எனினும் கணிதத் துறையைத் தெரிவு செய்து பொறியியலாளராக வரவேண்டும் என்ற ஆசையுடன் கல்வி கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று கனவை நனவாக்கினேன்.

பெற்றோர், உறவினர் ஆகியோரின் பேருதவியுடன் இப்பெறுபேற்றை அடைய முடிந்தது. அத்துடன், எனது கல்விக்காக உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் வகுப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வெற்றி நிச்சயம்" தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பரீட்சைகள் எனது கல்வி மட்டத்தரத்தை மேலும் உயர்த்த வழிகோலியது. எனினும் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெற முடியவில்லை. எனது குடும்பம் சாதாரணதர குடும்பம். ஆகவே சில கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனது முன்னேற்றத்திற்கு நண்பர்களும் உதவி செய்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் பல விடயங்களைத் தேடிக் கற்பதன் மூலமும் விடா முயற்சி, தன்னம்பிக்கை, கடவுள் பக்தி, குருபக்தி என்பனவற்றுடன், கற்பதன் மூலமும் எத்துறையிலும் வெகுவாக முன்னேற முடியும். எனவே கணிதத்துறையை இலகுவாகப் புரிந்து பல பயிற்சிகளைச் செய்வதன் மூலம் இலகுவாக முன்னேற முடியும் என்பது எனது அனுபவம்.

பல்தேர்வு வினாக்களில் ஏற்பட்ட கவனயீனப் பிழைகளும் எனது பெறுபேறு சற்றுக் குறைந்தமைக்குக் காரணமாகும். இணைந்த கணிதம் பகுதி-I இல் சற்று சறுக்கல் ஏற்பட்டாலும் அதை பகுதி-II இல் நிவர்த்தி செய்தேன். ஏனைய வினாத்தாள்கள் அவ்வளவு கடினமாக இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

பாலகன்
இராஜ்மோஹன் திபிராஜ்

திதி: திரயோதசி

பெற்றவர்களுக்கு தெய்வ மகனாகப் பிறந்தாய்
ஒளிதந்தாய் வாழ்வும் தந்தாய் மறைந்தும் விட்டாய்
செல்வமகனே தெய்வமகனே திபிராஜாவே!
பெற்றவர்களின் இறுதிக்கடன் செய்வேன் என்றாயே!
எங்கள் ஒரேயொரு மகனையும் ஏன் பறித்தாய் படைத்தவனே?
பெற்றவர்களின் உயிரில் கலந்துவிட்ட திபிராஜாவே
எந்நாளும் உங்கள் பாதம்பட்ட இடங்களை
கண்ணீரால் கழுவுகின்றோம் எங்கள் தெய்வமகனே!

25.12.2008 அன்று மண்ணுலக வாழ்வை முடித்துக்கொண்ட எமது மகனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.02.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்
19.01.2001

மறைவு
25.12.2008

என்றும் நினைவுடன்:
இராஜ்மோஹன் -விஜயா (பெற்றோர்)
(ஒட்டோசாரதி- 21 1037).

தில்லைவயல், ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(82428)

அன்பான இயேசு ஜீவகீதங்கள் பாடகரின்

31 ஆம் நாள் நினைவு தினமும், நன்றி நவிலலும்

கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்
(1 கொரி: 15.43)

வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
பிறருக்காய், தேவபணிக்காய், ஜெபத்திலும், உபவாசத்திலும்
தன்னை உருக்கி எம்மைத் தாங்கி பெலப்படுத்தியவரே!
உங்கள் பிரிவை எங்களால் தாங்க முடியவில்லை!
ஆண்டவர் ஆற்றினால் மட்டுமே நாம் ஆறுவோம்

சகோ.நடராஜா பத்மதேவா
(அன்பான இயேசு ஜீவ கீதங்கள் பாடகர், சுவிஷேசகர்)

நிஜமானது
03.02.1959

நிழலானது
07.01.2009

உயிர் பிரிந்த செய்தி கேட்டு ஒருகணம் விறைத்துப் போய் பல மிழந்து, நடைதளர்ந்து, மனம் கசந்து, அழுது, அழுது ஓடி வந்தவர்களையும் வரமுடியாதவர்களையும், தம்மை தேற்ற முடியாமல் எம்மைத் தேற்றி ஆறுதலும் உதவிகளும் புரிந்தவர்களையும் மறக்க முடியாது.

மேலும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் எமக்கு உதவிய அனைத்து மக்களுக்கும் மற்றும் மலர்வளையங்களாகவும், பத்திரிகை வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் தொலைபேசிகள், தந்திகள், அனுதாப அட்டைகள், கடிதங்கள் மூலமாகவும் தமது கண்ணீர் அஞ்சலிகளையும் அனுதாபத்தையும் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு கிறிஸ்தவ சபைகள், போதகர்கள், விசுவாசிகள், யாழ்ப்பாண மத்திய கல்லூரி - அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், கங்கை பிறிண்டேர்ஸ்மற்றும்வெளிநாட்டுHOLY GOD, LIVING GOD தொலைக்காட்சி ஊடகங்களுக்கும் பாடல்கள் இசை வழங்கியவர்கள், உணவு தயாரித்தவர்கள், வாகனம் உதவியவர்களுக்கும் சகல கிறிஸ்தவ ஐக்கியத்தில் உள்ளவர்களுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தாங்கள் அளித்த ஆறுதலுக்கும், உதவிகளுக்கும் எங்களைத் தாழ்த்தி இயேசுவின் நாமத்தில் நன்றி கூறிக் கொள்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை, இலங்கை.
தொ.பே.இல.060 221 4242

மகள்
சரண்யா பத்மதேவா
குடும்பத்தினர்.

(82464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் மண்ணில் உயிர்வாழும் நூலகமாய் விளங்கும் பன்முக ஆளுமைகளைக் கொண்ட குமாரசாமி ஐயா!

'முதியவர்கள் ஒவ்வொருவரும் உயிர் வாழும் நூலகங்கள்'' என்று ஐரோப்பியரின் பழமொழி ஒன்று உள்ளது.

தாம்-வாழ்ந்து பெற்ற பட்டறிவால் முதியவர்கள் அவ்விதம் புகழப்படுகின்றார்கள்.

இக்கூற்றை மெய்ப்பிக்கும் ஒருவராகக் கோப்பாய் வடக்கில் வசிக்கும் 'குமார சாமி ஐயா'வைக் குறிப்பிடலாம்.

ஆசிரியராக, தொழிற்சங்கத் தலைவராக, எழுத்தாளராக, ஓவியராக, கூட்டுறவு முன்னோடியாக எனப் பன்முக ஆளுமையுடன் தான் வாழ்ந்த சமூகத்திற்குப் பயன்தந்த பெருவிருட்சம் அவர்.

தேசத்திற்கே அளப்பரிய சேவை செய்த அவரைக் கிராமத்துவேர்களில் ஒன்றாக வெளிச்சம் போட்டுக் காட்டுவது காலத்தின் அவசியமாகும்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பிரதி அதிபராக இருந்து ஓய்வுபெற்ற மூத்த மகள் திருமதி சிவானந்தன் இந்திரகுமாரி குடும்பத்தவருடன் அவர் வசித்து வருகின்றார்.

தனது தொண்ணூற்றைந்து வயதிலும் எழுத்துப் பணியைத் தொடர்வதையும், ஏறத்தாள ஒரு நூற்றாண்டுகால வாழ்வின் ஞாபகப் பக்கங்களை ஒரு நீண்ட நாள்குறிப்பின் கோர்வையாக அவர் சுயசரிதம்போல் விவரிக்கத் தொடங்கினார்.

நான் 06.09.1913இல் தற்போதிருக்கும் அப்பிளானை, கோப்பாய் வடக்கு எனும் முகவரியில் தான் பிறந்து, வளர்ந்தேன்.

எனது தந்தையார் க.இளையதம்பி அவர்கள் மலேசியாவில் அரச பணியாற்றியவர். அக்காலத்தில் பிரபல சோதிடராகக் திகழ்ந்தார்.

1918இல் கோப்பாய் சி.எம்.எஸ். பாடசாலையில் 01ஆம் வகுப்பில் சேர்ந்து 05ஆம் வகுப்பு வரை கல்வி கற்றேன்.

அப்போது பிரித்தானியர் இலங்கையை ஆண்டகாலம். ஆதலால் கூடுதலாக ஆரம்பக்கல்வி மிஷன் பாடசாலைகள் மூலமாகப் பெறப்பட்டது. இன்றும் எண்ணற்ற மிஷன் பாடசாலைகள் இயங்கி வருவதைக் காணலாம்.

எனது வகுப்பாசிரியரான திருமதி சின்னப்பா சின்னப்பிள்ளை 04ஆம் வகுப்பு வரை சிலேற், பென்சில் பாவித்துத் தான் கல்வி புகட்டினார். 05ஆம் வகுப்பில்தான் பென்சில், கொப்பி உபயோகிக்கும் வழக்கம் அக்காலத்திலிருந்தது.

இக்கால மாணவருக்கு - இளைய சமுதாயத்தினருக்கு- ''சிலேற்றை'' தெரியும் என நான் நினைக்கவில்லை.

1924, 1925ஆண்டுகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆங்கிலமொழி மூலமான கல்வியும், 1926-30 வரை கோப்பாய் அரசினர் சாதன பாடசாலையில் எஸ்.எஸ்.சீ. (இன்றைய O/L) வரையும் கல்வி பெற்றேன்.

எனது ஆசிரிய சேவையை எனது 17 ஆவது வயதில் 01.10.1930இல் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் ஆரம்பித்தேன்.

1932, 1933 ஆகிய ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சியை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்தேன். எனது ஆசிரிய சேவையில் கோப்பாய், கொக்குவில், கல்வியங்காடு, உரும்பிராய், கைதடி ஆகிய பிரதேசப் பாட சாலைகளில் கற்பித்தேன்.

அத்துடன் கண்டி சென்.பொஸ்கோ பாடசாலை, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆகியவற்றிலும் வெளி மாகாணப்

பணியாக ஆசிரியராக இருந்தேன். ஈவினை விக்னேஸ்வரா வித்தியாசாலை, கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலை ஆகியவற்றில் தலைமை ஆசிரியராகப் (அதிபராக) பணி செய்துள்ளேன்.

நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்தபோது தமிழகத்திலிருந்து திரு.வி.க. எனப்படும் கல்யாண சுந்தர முதலியார் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வண்ணார் பண்ணையில் அவர் நிகழ்த்திய பிரசங்கத்திற்கு எனது ஆசான் மகாலிங்கசிவம் உபாத்தியாயர் சென்றிருந்தார். அவர் அங்கிருந்து வந்து என்னை அழைத்து வரவேற்பு பாக்கள் தந்தார்.

நான் அவற்றிலிருந்து பாவரிகளைத் தேர்ந்தெடுத்து 10 வரியில் வரவேற்புபா ஒன்றை உருவாக்கினேன். திரு.வி.க. ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு வந்தபோது வரவேற்புபா படித்தேன். அவர் உளம் மகிழ்ந்து பாராட்டியதையும் முதுகில் தட்டி வாழ்த்தியதும் என் புலன்கள் என்னை உணரும் இறுதிக்கணம் வரை நினைவில் வாழும்.

1946ஆம் ஆண்டில் நான் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க காரியதரிசியாக (செயலாளர்) இருந்தேன்.

அக்காலத்தில் தமிழ், சிங்கள மொழிகளில் கற்பிக்கும் ஆசிரியரை சுயமொழி ஆசிரியர் எனவும், ஆங்கில மொழியில் கற்பிப்போரை ஆங்கில மொழி ஆசிரியர் எனவும் அழைப்பது வழக்கம்.

ஆனால் பாட விதானம், பரீட்சை வினாத்தாள் எல்லாம் ஒன்றாயிருந்தது.

1946இல் சம்பள விசாரணைச் சபை யின் அறிக்கையின்படி புதிய சம்பள அளவுத்திட்டம் நடைமுறைக்கு இடப்பட்டது.

அதன்படி சுயமொழி ஆசிரியர்களுக்கு ஆரம்பச்சம்பளம் 69ரூபா ஆகவும், ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு 140ரூபா ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருந்தது.

சமவேலைக்கு சமசம்பளம் கோரி இலங்கை முழுவதும் சகல ஆசிரியர் சங்கங்களும் தொடர்போராட்டத்தை நடத்தின. வேறுபட்ட சம்பள அநீதியை எதிர்த்து 31.07.1947இல் கொழும்பு வித்தியாக் கந்தோரில் ஒரு கூட்டமும் நடந்தது. அதில் ரம்புக்கனை (இரத்தினபுரி) தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தலைவர்களும் கலந்துகொண்டு நியாயத் தன்மைகளை விளக்கினர்.

அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சியில் வித்தியாபதியாக இருந்த மைக்கிறே எனும் பிரித்தானியர் எமது கோரிக்கையை ஏற்று அடுத்த நாளாகிய 01.08.1947முதல் சகலருக்கும் 140ரூபா என்ற சம்பள அளவுத்திட்டத்தை வழங்கினார்.

கோப் பாய் வடக்கு வாலிபர் சங்கத்தை 1940இல் இவ்வூர் இளைஞர்களுடன் சேர்ந்து உருவாக்கினேன்.

அக்கால கூட்டுறவு முன்னோடிகளான மாதகல் தம்பா, இடைக்காடு தம்பி முத்து, நீர்வேலி செ.நடராசா ஆசிரியர் ஆகியோரின் வழிகாட்டலைப் பெற்று 23.10.1940இல் கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தை உருவாக்கினேன்.

இச்சங்கத்தின் மூலம் அங்கத்தவர்களுக்கு றலி சைக்கிள் 100 ரூபாவிற்கு கடன் அடிப்படையில் பெற்றுக்கொடுத்தோம்.

இதுபோன்ற கூட்டுறவு அமைப்புக்கள் அக்காலத்தில் குடாநாடு எங்கும் தோற்றம் பெற்றன. அப்போது நடைபெற்ற 2ஆம் உலகப்போரில் ஏற்பட்ட உணவுப் பங்கீட்டிற்கு இவை பெரிதும் உதவியது.

நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மாணவராயிருந்தபோது சித் திர ஆசான் S.R.கனகசபை அவர்களின் உதவியுடன் 'வின்சர் ஆர்ட் கிளப்' எனும் அமைப்பை உருவாக்கினேன்.

மருதன்

எனது ஆசிரியப்பணி காலத்திலேயே பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், இளஞ்சைவப்புலவர் ஆகிய தேர்வுகளை நிறைவு செய்தேன். அரவிந்தவாசம் எனும் பெயரிலான பதிப்பகம் மூலம் கோவைக் கிழார் க.இ.குமாரசாமி எனும் பெயரில் நூல் வெளியீட்டுப் பணியைச் செய்து வருகின்றேன்.

அவர்1998ஆம் ஆண்டு கோப்பாய் வரலாறு-கூட்டுறவு, 1999இல் கண்ணகிசரிதை வரலாறு, 2005இல் இரு நூல்கள், இலங்கையில் கற்புடை மாதர் வழிபாடு, யாழ் தமிழரும் இந்துமத வழிபாடுகளும் ஆகிய நூல்களே வெளியிடப் பட்டவை.

தற்போதும் அவரது சுயசரிதை நூல், இலங்கை சரிதம், சுக ஆதாரங்கள் ஆகிய நூல்கள் வெளியிடும் தறுவாயில் உள் ளன.

பிறர்க்கென வாழும் வாழ்வின் நிறைவு எம்மை நிறைவாக உயர்வாக வாழவைக்கும் என்ற உண்மையின் ஒளியை இவது சந்ததிகளில் இன்னமும் காணமுடிகின்றது. ★

பண்ணாகம், மெய்கண்டான் மகாவித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவில் மாணவர்களுடன் வித்தியாலய அதிபர், ஆசிரியை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் ஆசிரியை திருமதி ச.சகலகலாவல்லி ஆகியோர் எடுத்துக்கொண்ட படம். *(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தால் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு வீதி ஒழுங்குமுறைகள் தொடர்பான களப்பயிற்சி நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். *(படம்: சித்தங்கேணிச் செய்தியாளர்)*

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட லொறி வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் சங்கத் தலைவர் ப.கிரிதரன், பொதுமுகாமையாளர் து.மனோகரன், இயக்குநர் ச.டொமினிக், வாகனச் சாரதி அடியுக் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்: குமார்)*

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும், பொங்கல் விழாவும் அண்மையில் நடைபெற்றன. கால்கோள் விழாவில் அதிபர் ச.வேலழகன், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் செ.சின்னத்தம்பி, யாழ்.வலய உடற்கல்விப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவகுமார் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடன் எடுத்துக்கொண்ட படம். *(படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளை இணைக்க நடமாடும் சேவை

கோப்பாய், பெப்.7

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளை இணைத்துக் கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் பணிமனையிலும் மறுநாள் வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

18-59 வயதிற்குட்பட்ட சுயதொழிலில் ஈடுபடுவோர் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதன் மூலம் 60 வயது முதல் ஓய்வூதியமும் 60 வயதிற்கு முன் இறப்பு ஏற்படின் மரணப்பணிக்கொடையும் 60 வயதிற்கு முதல் அங்கவீனம் ஏற்படின் சமூக பாதுகாப்பு உதவுதொகையும் வழங்கப்படும்.

கடந்த வருடம் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்தி இரண்டு பேர் இத்திட்டத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(203-72)

இலவச மருத்துவ சேவை

மூளாய் கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலை சங்கத்தினர் சங்க எல்லைக்குட்பட்ட கிராமங்கள் தோறும் வார நாள்களில் இலவச மருத்துவ முகாமை நடத்தி வருகின்றனர். வாரம் தோறும் ஐநூறு நோயாளர்களுக்கு பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(203-28)

விற்பனைக்கு

ஓடு, தீராந்தி, பனைச்சிலாகைகள், கதவு என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778147091

Organ Violin Notes

Organ,வயலின்,Guitar புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக் குண்டு. Organ, Guitar புல்லாங்குழல் வகுப்புகள் தினமும் பி.ப 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.
S.S.Rajeinthiran.
75, கோவில் வீதி, நல்லூர்.
T.P: 0713055991

மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1970 சித்திரை 3, பாவம் 21, அரசபணி 1978 திருவோணம் 2, அரசபணி உள்நாடு மணமகன் தேவை
T.P: 0776610752, 7-9 PM

வீடு வாடகைக்கு

இணுவில் றோட் 1 ஆம் குறுக்கு வீதி, மானிப்பாயில் வீடு வாடகைக் குண்டு.
தொடர்பு:- ப.கனகரத்தினம் சாந்தி
இணுவில் றோட், 1 ஆம் குறுக்கு வீதி, மானிப்பாய்.
T.P: 0778329619, 0774297450

காடைக் கோழி விற்பனை

எம்மிடம் காடைக் கோழிக்குஞ்சுகளும், இறைச்சிக்கானதும், பருவமடைந்த காடைக் கோழிகளும் விற்பனைக்குண்டு.
54, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
T.P: 2228495

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தால் பணப்பரிமாற்ற சேவை

யாழ்ப்பாணம், பெப்.7

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'வெஸ்ரன் யூனியன்' பணப்பரிமாற்ற சேவையை அடுத்த வாரமளவில் ஆரம்பித்து வைக்கவுள்ளது என்று சங்கத் தலைவர் எஸ்.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

உடுப்பிட்டி பிரதேச மக்களின் வசதி கருதி இந்த பணப்பரிமாற்ற சேவையை ஆரம்பிக்க முழு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

(203-224)

மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு சத்துணவு

சித்தங்கேணி, பெப்.7

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் வைத்து சத்துணவு வழங்கப்படவுள்ளது.

உரிய முன்பள்ளிகளின் பொறுப்பாசிரியர்கள் இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

(203-112)

சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி

சித்தங்கேணி, பெப்.7

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2008 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடை நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த நிதியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் கேட்டுள்ளார்.

(203-112)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரீட்சை 2008 இல் சித்தியடைந்த மாணவன் செல்வன் தர்மகுலசிங்கம் நிராஜா மேலும் கல்வியில் சிறப்புற்று வாழ மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம்.

அறிவித்தல்

யா/பன்னாலை சேர்.கனகசபை அ.த.க.பாடசாலை-தெல்லிப்பழை

எமது பாடசாலையின் 153 ஆவது வருட நிறைவும், பரிசளிப்பு விழாவும் 14.02.2009 சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

நினைவுப் பரிசில்கள், அன்பளிப்புகள் வழங்க விரும்பும் பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் 12.02.2009 வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்
யா/பன்னாலை சேர்.கனகசபை
அ.த.க.பாடசாலை, தெல்லிப்பழை.

காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் யாழ்.பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக்கமாக கிணற்று வசதியுடன் கூடிய 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 0779522521
சிறி:- 0775924843
0776111419

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் அழகுக்கே மேல்பூச்சுமருந்து)
வெண்ணாதனை, மரமஞ்சள், நன்னாரி, கல்நார், மஞ்சள், செவ்வல்லி, சிவிப்பு தேசிய அழகுக்கு ஏனை தங்களின் தகவை, நோக்கி, முகப்பரு, முகுருகள், பருத்தமடை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரிகளை தவிர்த்து, சருமத்தை மிருதுவாக்கி பளபளப்பு உண்டாகி வசீகர முக அழகை தரும். உதடு, பாதவெடிப்பு, சருமம் கருகருத்தல், வினை படுதல் போன்ற சருமநோய்களைப் முழுமையாகக் குணமாக்கும். ஏனைய சோப்பு பின்னர் முகத்தில் பூசுதல் முகம் பின்னர் விரத்தை நீக்கி, சருமத்தை மென்மையாக்கும். எடுப்பான கவர்ச்சி தோற்றத்தைத் தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பாம்மிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY:
SAN JEEVVAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYV PRO NO: REG NO. A/T. 250.
(சி/55288)

வருட நினைவுகள்

முதலாம் | மூன்றாம்

சி.கந்தசாமி — திருமதி க.சந்திராதேவி

01.04.1934 ◄◄ தோற்றம் ►► 21.12.1948
20.01.2008 ◄◄ மறைவு ►► 31.01.2006
பூர்வபக்க திரயோதசி ◄◄ திதி ►► பூர்வபக்க துதியை

காலங்கள் மெல்லக் கரைந்து சென்றாலும்
கண்களுக்குள் உம் உருவம்
கனத்த மனங்களுக்குள் உம் நினைவு
கவிந்து நிறைந்திருக்கும்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(82477)

மரண அறிவித்தல்

திருமதி கிருபைமலர் மயில்வாகனம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல.66, சப்பல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபைமலர் மயில்வாகனம் (04.02.2009) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், மயிலா, ஞானா மற்றும் காலஞ்சென்ற ஜெபாவின் அன்புத் தாயும், மைக்கலின்(ஆசிரியர்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.02.2009) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66.சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மயிலா (மகள்).

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 * 04 * 1941
விண்ணில் 07 * 02 * 2005

திருமதி அழகம்மா கந்தசாமி

(முன்னாள் ஆசிரியை- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

அன்பால் எமை அணைத்து
அறிவால் எமை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற
பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!
கர்த்தருக்குள் நீங்கள் மகிழ்ந்திருக்க
நாங்கள் காலமெலாம் நினைத்திருப்போம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(சி/557047)

QUALITY COMPUTER EDUCATION 15 YEARS
புத்தாண்டில் உங்கள் முதல் முதலீடு...
கம்ப்யூட்டர் கல்விக்காக இருக்கட்டும்,
அதுவும் தரமான No-1 ASIAN - CSC உடன் தொடங்கட்டும்.
DIRECT START 2009
டிப்ளோமா கற்கைநெறிகள்
After O/L What Next...
Diploma in Ms Office 2007
Diploma in Desktop Publishing
Diploma in Webpage Design
Diploma in Digital Video Production
Diploma in Computerised Accounting
Tally Accountancy Training
Duration : 3 months for all courses
Feb-08 முதல் புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்...
Registered with Ministry of Tertiary & Vocational Education Commission
ASIAN-CSC COMPUTER EDUCATION
26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel:021 222 1567
கிளை: கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel:077 3122198

டிலன் ஹொட்டல்

எமது வாடிக்கையாளரின் விருப்பப்படி மீண்டும் அனுபவ மிக்க உணவு தயாரிப்பாளரைக் கொண்டு தயாரிக்கப்படும்.

* புரியாணி வகைகள்
* பிறைட் றைஸ் வகைகள்
* நூடில்ஸ் வகைகள்
* டெவல்ஸ் வகைகள்
* சூப் வகைகள்
* இந்தியன் உணவு வகைகள்
* உள்நாட்டு உணவு வகைகள்

என்பனவற்றை ஒருமுறை வந்து சுவைத்துப் பாருங்கள்

டிலன் ஹொட்டல்
இல.133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/55876 0)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே நல்லரண்

இந்திரா பொன்னுரை

வாய்ப்புகள் என்றும் வீணாக்கப்படுவதில்லை. நாம் தவறவிட்டதை மற்றவர்கள் பயன்படுத்துகிறார்கள். பிறர் மீது நாம் கொண்ட நம்பிக்கை குறைந்துபோனால் எழுவது சந்தேகம். நம்மீது நாம் கொண்ட நம்பிக்கை குறைந்துபோனால் எழுவது என்ன?

ஒருமுறை சீகல் பறவை சொன்னது ''உயர உயரப் பறந்து கீழே விழுந்தபோது விழுந்ததால் ஏற்பட்ட வலியை விட விழுந்ததுதான் வலித்தது'' என்றது. அன்று தான் கிராமத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணியிருந்தால் இசைஞானி இளையராஜாவும், தான் கறுப்பாக இருக்கிறேன் என்று கருதியிருந்தால் நடிகர் பார்த்தீபனும், தான் உயரம் குறைந்தவன் என்று நினைத்திருந்தால் சுனில் கவாஸ்கரும் தத்தம் துறைகளில் முன்னேறியிருக்கமுடியாது.

ஒருகாலை இழந்த பின்னரும் நடனம் கற்று விருது பெற்ற சுசில் சந்திராவும், இரண்டு கண்களை இழந்த பின்பும் வயலின் கற்று மாமேதையாகியவரும் நம்பிக்கை நட்சத்திரங்கள் என்று கூறுவதில் ஐயமில்லை.

''உள்ளம் என்றும் எப்போதும் உடைந்து போகக்கூடாது. என்ன இந்த வாழ்க்கையென்று எண்ணம் தோன்றக்கூடாது'' பெரிதாக இருக்கின்ற யானையா காட்டரசன்? சீறிடும் சிங்கம் தானே. மானின் அழகோ, புலியின் வீரமோ, நரியின் தந்திரமோ, முயலின் வேகமோ, குரங்கின் அறிவாற்றலோ இல்லாத ஒன்று சிங்கம். ஆனால் அதனிடம் உள்ளது தன்னம்பிக்கை. இதனால் தான் காட்டுக்கு ராஜாவாக இருக்கிறது. மாங்காய் பெரிதா, சிறிதா என்பது முக்கியமில்லை. அது சுவையானதா என்பதே முக்கியமானது. அதுபோலவே மனிதனும் சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட தன்னம்பிக்கை உள்ளவனாக இருக்கிறானா? இல்லையா? என்பதைக் கொண்டே அவனது வெற்றி அமைந்துவிடுகிறது.

கொண்டு போன கூடை சிறியது என்ற காரணத்தால் பிடித்த பெரிய மீன்களையெல்லாம் மீண்டும் கடலிலேயே விட்டுக்கொண்டிருந்தான் ஒருவன். மனமென்னும் மேடையைப் பெரிதாக அமைத்துக்கொண்டால் அடையப் பெறும் வெற்றிகளும் பெரிதாக அமையும். நேற்று என்பது முடிந்துபோனது. நாளை என்பது எதிர்பாராதது. இன்று மட்டுமே நிஜமானது. அந்தவகையில் வாழப் பழகுங்கள். சருகுகளை எண்ணிப் பார்க்காமல் பூக்களைப் பார்த்துப் புன்னகைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழவேண்டும் என்பதே வாழ்க்கை.

''மெழுகு உருக மறுத்தால் ஒளி கிடைக்காது
இரவு விடிய மறுத்தால் பகல் இருக்காது'' இவ்வாறே மனிதனது வாழ்க்கையிலும் இன்ப துன்பங்கள், இலாப நட்டங்கள், வரவு செலவுகள் என்பன மாறிமாறி வருகின்றன.

''தெய்வத்தால் ஆகாதது எனினும் – முயற்சி
மெய்வருத்தக் கூலி தரும்'' தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் வெற்றியடைவீர்கள்.

நீங்கள் ஒவ்வொருவரும் எம்மைப் படைத்த பரம்பொருளை நோக்கி இறைவா! வழுக்கக்கூடிய பாறைகள் படைத்த நீ வழுக்காத பாதங்கள் படைக்க வில்லையே. எந்தப் பாறையில் எனது கால்கள் வழுக்கும் என்பது உனக்கு மட்டுமே தெரியும். அலைபோல ஆடும் அற்ப மனதில் கரையாக உன் கரம் நிறுத்தி ஆட்கொள்ளும்படி பிரார்த்தியுங்கள்.

நாளைய நாளின் நம்பிக்கை முனையில் பிரியாத வகையில் உங்கள் பெயரைப் பதித்திடுவீர்கள். ஜோதிமயமான வாழ்வு கிட்டும்.

''புல்லின் மீது பனித்துளியும் பாரம்தான்
கதிரவன் வரும்வரை!
கண்ணில் உள்ள கனவும் பாரம்தான் – அது
நனவாக மாறும்வரை''

கைபடாத எழுத்துக்கள்

தருமகுலன்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கணித பாடத்தைக் கற்கின்றபோது அங்கு இடம் பெறுகின்ற கணித வாய்பாட்டு அட்டவணையை நன்றாக மனனஞ்செய்கின்றோம். அவற்றை ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றோம். ஆனால், தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையிலுள்ள எழுத்துக்கள் அனைத்தையும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகிறோமா என்றால் சந்தேகப்படக்கூடிய விடயமாகவே அமையும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனப் பலரும் கூறுவர். மொழியின் உயிரோட்டத்திற்குக் கண்ணென விளங்கும் எழுத்துக்களில் ஒரு சில எழுத்துக்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டு காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக அறியப்படவில்லை.

பயன்படுத்தப்படாத எழுத்துக்களில் 'ங்' என்ற எழுத்து வரிசையில் இடம்பெறும் 'ங' தவிர்ந்த ஏனையவற்றையும் 'ஞ்' என்ற வரிசையிலுள்ள சில எழுத்துக்களும் 'ழ்' என்ற வரிசையில் இடம்பெற்றுள்ள சில எழுத்துக்களும் அடங்கும். தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையில் உள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களில் கிட்டத்தட்ட பதினைந்து எழுத்துக்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. தமிழுக்கு அமுதென்று பெயர் எனக் கூறும் நாம் அந்த அமுதத்தின் சில பகுதிகளை உண்ணாமல் இருக்கின்றோமா அல்லது அவற்றை உண்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா என எண்ணத் தோன்றுகிறது.

தமிழ்நெடுங்கணக்கு அட்டவணையிலுள்ள பயன்படுத்தப்படாத இந்த எழுத்துக்கள் அட்டவணையை நிரப்புவதற்கும், அழகுபடுத்துவதற்கும் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதோ என ஐயங்கொள்ள வேண்டியேற்படுகின்றது. அவை மட்டுமல்லாது சிறுவயதிலே மாணவர்கள் தமிழிலுள்ள எழுத்துக்கள் அனைத்தையும் மனனஞ் செய்யப்படவேண்டுமென்றும் சில வேளைகளில் எழுதிக்காட்டப்படவேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். பயன்பாட்டில் இல்லாத எழுத்துக்களையும் மாணவர்கள் மனனஞ் செய்வதால் அவர்களுக்கு ஏற்படும் பயன் என்ன? அவற்றுக்காக ஒதுக்கப்படும் நேரமும் அதனால் ஏற்படும் சிரமமும் அதிகரிக்கின்றதே தவிர வேறு எதுவும் இல்லை.

ஒருவேளை புதிய மொழிகளின், சொற்களின் வருகையால் இவ்வெழுத்துக்கள் பயன்படுத்தப்படலாம் என்ற எண்ணம் ஒருவேளை அமைந்துவிடலாம். தற்காலத்திலே பிறமொழிகளின் பயன்பாடும், ஆதிக்கமும் அதிகமாக உள்ளன. சில சொற்களை அவ்வாறே ஒலிபெயர்த்து எழுதிவிடுகின்றோம். எடுத்துக்காட்டாக 'ழகான்' என்ற திரைப்படத்தின் பெயரின்முன்னே இடம் பெற்றுள்ள 'ழ' என்ற எழுத்து நீண்டகாலமாக மொழி முதலாகப் பயன்படாமல் இச்சொல்லுக்கெனப் பயன்படுத்தப்பட்டது. இது காலத்தின் தேவையும்கூட. இங்கு இடம் பெற்ற 'ழ' என்ற எழுத்து ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளது. ஆனால், இதுவரை பயன்படுத்தப்படாத எழுத்துக்கள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இலக்கியங்களிலோ அல்லது பத்திரிகைகளிலோ பயன்படுத்தப்படவில்லை.

ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கை இருபத்தாறு. அவற்றை மொழிப்பயிற்சிக்கு கொண்டு வருவதற்காக நீண்டகாலங்களில் சிரமப்பட்டு எழுதியோ உச்சரித்தோ முயன்று விடுகின்றோம். அதனால், தமிழில் பயன்படுத்தப்படாத எழுத்துக்களையும் நினைவில் வைத்துக்கொள்வதற்கு நாம் செலவு செய்யும் காலங்களின் எண்ணிக்கைதான் எவ்வளவு. எனவே பிறமொழிகளைக் காட்டிலும் தமிழ்மொழியிலே அதிகப்படியான எழுத்துக்கள் உண்டு எனப் பெருமை கொள்கின்ற போதிலும் இற்றைவரை பயன்படுத்தப்படாத எழுத்துக்களைத் தவிர்த்துக்கொள்வது, இந்த இரண்டாயிரம் ஆண்டு மொழிப்பயன்பாட்டிற் காணப்பட்ட அனுபவத்தினூடு நல்லதெனக் குறிப்பிட முடிகின்றது.

(முற்றும்)

யாருமே காணாத ஒரு துரோகன்

கோகுலராகவன்

(கடந்த வாரம் வெளியாகியவை தொடர்ச்சி)

இப்போது பள்ளிகளில் விளையாட்டுப் போட்டி சீசன் தொடங்கி இருக்கின்றது. இணைப்பாட விதான செயற்பாடுகளின் நோக்கமாக மாணவர்களை உற்சாகப்படுத்துவது என்பது பிரதானமானதாகக் கருதப்படுகின்றது.

என்னுடன் படித்த பிரதாபன் என்ற நண்பன், விளையாட்டுகளில் வீரன். 100 மீற்றர், 200 மீற்றர் ஓடுவதில் கெட்டிக்காரன். மிகவும் துரதிஸ்ரம்; விளையாட்டுப் போட்டிக்கு மட்டுமே (அந்தக் காலம் மட்டும்) பள்ளிக்கு வருவான். பிறகு நின்றுவிடுவான். எங்கள் நாள்களில் இப்போது இருப்பது போல விளையாட்டுச் சான்றிதழ்களுக்குரிய பள்ளிப் பகிர்வு இல்லாததும் – அதாவது இரு பலங்களும் இணையில்லாததும் – ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால் இன்று இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பல்கலைக்கழக அனுமதி தங்கியிருப்பது வரப்பிரசாதம். விளையாட்டில் ஈடுபாடு உள்ள பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது மிகவும் சுலபம். இவ்வாறான மாணவர்களிடம் நேர்த்தி ஒன்று இருப்பதை நான் உணர்ந்திருக்கின்றேன்.

எங்கள் பள்ளியில் ஒரு மாணவி நன்றாக ஓடுவாள், குருவி மாதிரி! அவளை ஒரு குருவியும் துரத்திப் பிடிக்கமுடியாது.

இந்தப் பானுஜா பாடசாலை மட்டத்தில் 400மீற்றரில் 15 வயதுப் பிரிவில் முதலாவதாக வந்தாள். பிறகு கோட்ட மட்டம், வலய மட்டம் இரண்டிலும் இரண்டாவதாக வந்தாள். இதனால் மாகாண மட்டம் போக அழைப்பு வந்தது. அதிபர் சிரித்தபடி –

''கோகுலன்! நீர்தான் கூட்டிக்கொண்டு போகவேணும்''

சரி. நானா ஓடுறது. அவள்தானே ஓடுறது என்றபடி வவுனியா வுக்கு மாகாண மட்டப் போட்டிக்கு கூட்டிக்கொண்டு போனேன். பானுஜாவின் தாயும் உடன் வந்தார். (சம்பவம் நடந்தது பாதை பூட்ட முன்னர்)

வவுனியா நகர சபை மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எங்கள் ஓட்ட நிகழ்ச்சி மறுநாள்.

எதற்கும் எமது உதவிக்கல்விப்பணிப்பாளரைச் சந்தித்துச் சொல்லி வைப்போம் என்று தேடிப்போனேன். பெயர் ஞாபகம் வர மறுக்கின்றது. மகாதேவனாக இருக்கலாம். நல்ல மனிதர். நல்ல சுபாவம்.

''சேர் வணக்கம்''

''தம்பி இஞ்சை வாடாப்பா. உன்னைப் பற்றிதான் யோசிச்சு கொண்டிருக்கின்றன்''

''என்னைப் பற்றி என்ன யோசிக்கிறியள்? உடம்பெடுத்திட்டு எண்டோ? சொல்லுங்கோ சேர்''

''அடேய். மாகாண மட்டப் போட்டிகளில் 15 வயது பெண்களுக்கு 400மீற்றர் இல்லையடா''

''என்ன சேர்?''

எனக்குத் தலை சுற்றுகின்றது.

''இவ்வளவு தூரம் வந்து திரும்பிப் போறதா?''

''பொறு, பொறு. பதட்டப்படாதை ஒரு விசயம் இருக்கு''

என்ன விசயம்? 400 மீற்றர் ஓட்டத்தை 200 , 200ஆக ஓட விடப் போறாரோ? என யோசித்தேன்.

''நாங்கள் சட்டவேலிக்கு (கேடில்ஸ்) பிள்ளையைக் கொண்டு வரவில்லை. அதற்கு இவளின் பெயரைப் போட்டிருக்கு. ஓடுமாதிரி ஓடவிடு''

''சட்ட வேலியா?''

எப்படி இது சாத்தியமாகும். அந்தப் பிள்ளைக்குக் கதிரைச் சட்டமும், காவோலை வேலியும்தான் தெரியும். எப்படி ஓடவிடுவது?

''பிரச்சினை இல்லையா?'' இது நான்.

''[illegible] பிரச்சினையும் வராது. நீ ஓடவிடு''

சரி என்றுவிட்டு பானுஜாவுக்கு சட்டவேலியைக் கொண்டு போய் காட்டினேன்.

எனக்கும் அன்றைக்குத் தான் சட்டவேலிகளை ஒழுங்காகப் பார்க்கமுடிந்தது.

''ஓடுவியா பிள்ளை?''

''ஒருக்கா ஓடிப்பாக்கிறன் சேர்''

உடுப்பு மாற்றி ஓடிப் பார்த்தாள்.

''ஓடலாம் சேர்''

பின்னேரமும் தாயைக் கூட்டிக்கொண்டு வந்து ஓடிப் பார்த்திருக்கின்றாள்.

மறுநாள் போட்டி ஆரம்பமாகின்றது. பானுஜா ஓடுகின்றாள்.

நான் நம்பிக்கையுடையவனாகவும், நம்பிக்கை அற்றவனாகவும் ஒன்று சேர நிற்கின்றேன்.

மிகக் கவனமாக ஓடவேண்டும். கைகாலில் அடிபட வாய்ப்பண்டு. தாயார் நல்லவர். எதுவும் தடை சொல்லவில்லை.

ஒவ்வொரு சட்டவேலியாக பானுஜா முன்னேறுகின்றாள். எனக்கு இதயம் படபடக்கின்றது. உன்னிப்பாகப் பார்க்கின்றேன்.

ஆம். பானுஜா இரண்டாவது!!!

இதுவல்லவா சாதனை!

''சேர்'' என்றபடி ஓடி வருகின்றாள். தாயாரும் அருகில் வருகின்றார். தாயின் கண்கள் கலங்குவதைக் காண்கின்றேன்.

எனது கண்கள் கலங்குவதையும், பானுஜாவும், தாயும் அவதானித்திருப்பார்கள் என்றுதான் நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பி விளக்கு சரிந்து விழுந்து தீப்பற்றியதில் ஒருவருக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், பெப்.7

குப்பி விளக்கு சரிந்து நுளம்பு வலையில் தீப்பற்றிக் கொண்டதில் அதனுள் படுத்திருந்த இளம் குடும்பப் பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஜெயகாந்தன் ஜெயச்சித்திரா (வயது 18) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

கூட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.7

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாதாந்த விவசாயக் குழு, ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றுக்கான கூட்டங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்கள் முறையே முற்பகல் 10.30, 11.30 மணிக்கு பிரதேச செலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (204-112)

* * *

நல்லூர், பெப்.7

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (204-111)

* * *

நாவற்குழி, பெப்.7

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சங்கத்தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் இணுவில் அண்ணா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. தாச்சி விளையாட்டுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (9-288)

கரப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,பெப்.7

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வல்வை றெயின்போ விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (1-86)

குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ.சங்கங்களில் மேலும் மூன்று 'மினிகோப் சிற்றி' வர்த்தக நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப்.7

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இந்த ஆண்டில் மூன்று 'மினிகோப் சிற்றி'வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மகிந்த சிந்தனையின் கீழ் கடந்த ஆண்டில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கோப்சிற்றிகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இந்த கோப் சிற்றிகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த ஆண்டில் ஒவ்வொரு சங்கமும் மூன்று கோப்சிற்றிகளை செயற்படுத்த சுமார் ஒன்பது லட்சம் ரூபா வழங்கப் படவுள்ளது.

இந்த மினி கோப்சிற்றிகள் சங்கங்களின் எல்லைக்குட்பட்ட கிராமப்புறங்களை மையப்படுத்தி அமைக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-224)

யாழ்ப்பாணம், பெப்.7

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் பெருமஞ்ச நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

1912 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்ட இந்தமஞ்சம் விரைவில் நூற்றாண்டு விழாவினைக் காணவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204-55)

* * *

கோப்பாய்,பெப்.7

வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயிலின் சங்காபிசேக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ஆலயத்தோடு சேர்த்ததாக மணமண்டபம் அமைப்பதற்குரிய ஆரம்ப நிகழ்வும் நடைபெறவுள்ளது. (204-72)

* * *

யாழ்ப்பாணம், பெப்.7

கைதடி அருள்ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் குருபூசையும், நவக்கிரகசுவாமிகள், தட்சணாமூர்த்தி சுவாமிகள் உட்பிரகார சுற்றுமதில் அடிக்கல் நாட்டு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆசியுரையினை இணுவில் தோட்ட கந்தசுவாமி ஆலயபிரம்மஸ்ரீ யோ.குருசாமிக்குருக்கள் நிகழ்த்துவார். (9)

* * *

யாழ்ப்பாணம், பெப்.7

இணுவில் மேற்கு (பருத்தியடைப்பு) வல்லவாம்பிகா சமேத செகராஜசேகரப் பிள்ளையார் கோயி லின் நூதன பஞ்சதள இராஜகோபுரகும் பாபிஷேக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள் ளது.

இந்தக் கும்பாபிஷேகத்துக்கு சிவஸ்ரீ உருத்திரஅபராஜதக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாகக் கலந்து கொள்வார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக கணிதபீட விரிவுரையாளர் இ.விக்னேஸ்வரன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், இணுவில் மேற்கு கிராம அலுவலர் க.இரவீந்திரன், பா.மகாலிங்கசிவம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த விழாவில் இராஜகோபுர கும்பாபிஷேக மலரும் வெளியிடப்படவுள்ளது. (204-55)

* * *

யாழ்ப்பாணம், பெப்.7

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

இந்தக் கோயில் கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றன. (204-250)

* * *

யாழ்ப்பாணம் பெப்.7

திருநேல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத்திருவிழா 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழா, 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா, 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா ஆகியனவும் நடைபெறவுள்ளன. (4-201)

* * *

வண்ணை, பெப்.7

யாழ்.மடம் வீதி, திருஇருதய ஆண்டவர் கோவில் வருடாந்த வழிபாட்டு நிகழ்வுகள் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தினமும் நடைபெற்று வருகிறன்றன.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நிறைவு நாள் வழிபாடும், திருச்சொரூப பவனியும் ஆசீர்வழங்கலும் இடம்பெறும்.

தினமும் மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் வழிபாட்டு தியானங்கள் இடம்பெற்று வருகின்றன. (203-160)

யாழ்ப்பாணம், பெப்.7

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் பிரதம விருந்தினராகவும், ரில்கோ கொலிடெய்ஸ் பிறைவேற் லிமிடெட் முகாமையாளர் த.ராஜ்குமார், உடுவில் பிரதேச செயலக விளையாட்டுத்துறை அதிகாரி செல்வி மனோன்மணி சின்னத்தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204-55)

★ ★ ★

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பாடசாலைப் பகுதித் தலைவர் செல்வி சுபத்திராதேவி இராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், ஓய்வுபெற்ற தபால் அதிபர் எஸ். சண்முகரத்தினம் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் சி.பொன்னம்பலம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204-250-267)

★ ★ ★

சுழிபுரம், பெப்.7

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் வித்தியாலய மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (204- 28)

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் நவரட்ணராஜா விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ். குணதாசன், காங்கேசன்துறை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் ப.கார்த்திகேசு ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர். (204)

★ ★ ★

அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் திருமதி சிவரூபி சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் முதன்மை விருந்தினராகவும், மாவட்ட வைத்திய அதிகாரி க.இராதயன், தெல்லிப்பழைக் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஐ.இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

★ ★ ★

சுழிபுரம், பெப்.7

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ஸ்வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (204-28)

சேவையில் ஈடுபட்ட மினிபஸ் பாதிப்புற்று மின்கம்பத்துடன் மோதிச் சேதமடைந்தது

யாழ்ப்பாணம், பெப்.7

பயணிகளை ஏற்றி வந்த மினிபஸ் 'ரயர்' திடீரெனக் காற்றுப் போனதால் மின்கம்பத்துடன் மோதி பலத்த சேதத்துக்குள்ளாகியது. எனினும் பயணிகளுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. நேற்றுக்காலை 6 மணியளவில் யாழ்.வீதி ஆறுகால் மடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

அனியார் போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான மினிபஸ் ஒன்று மாதகலில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ். நோக்கி சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

சேவை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் ஆறுகால் மடத்தடியில் பஸ்ஸின் ரயர் திடீரென காற்றுப்போனதால் எதிரேயிருந்த மின்கம்பத்துடன் மோதி பஸ்ஸின் முன்பக்கம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. எனினும் பயணிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. (09)

திருமண வாழ்த்து

து.திலிப்குமார்
ப.துளசி

இன்று சனிக்கிழமை பிற்பகல் 12.15- 2.15 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் திருமண வைபவத்தில் இல்லற வாழ்வில் இணையும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆசிரியர் **து.திலிப்குமாரையும்** பருத்தித்துறையூர் **ப.துளசியையும்** பல சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்,
கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி.

திருமண வாழ்த்து

இன்று (07.02.2009)
இல்லற பந்தத்தில்
இணையும்
மணமக்களை
சகல வளங்களும்
பெற்று பல்லாண்டு
காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

மணமகன்
சுதாகரன்
(உரிமையாளர், அன்னை ரெக்ஸ், நெல்லியடி, சாவகச்சேரி)
இல்லம்: நவீனசந்தை, சாவகச்சேரி.

மணமகள்
கல்யாணி

வாழ்த்துபவர்கள்:
அபிஷா ரெக்ஸ்
உரிமையாளர்களும், ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிப் பொருள்களை கொண்டுவந்த லெபனான் கப்பல் தடுத்து வைப்பு

இஸ்ரேலிய கடற்படை நடவடிக்கை

டெல் அவிவ், பெப்.7

''உதவிப் பொருள்களை ஏற்றிக் கொண்டு காஸாவை நோக்கிப் புறப்பட்ட லெபனான் கப்பலொன்று, இஸ்ரேலிய கடற்படையால் தடுக்கப்பட்டு பாதுகாப்புடன் இஸ்ரேலிய துறைமுகமான அஸ்டொட்டுக்கு கொண்டுவரப்பட்டது'' என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதேவேளை, இக்கப்பல் தனது பயணத்தைத் தொடர இஸ்ரேல் அனுமதிக்க வேண்டுமென்றும், இது தொடர்பாக சர்வதேச சமூகம் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென்றும் லெபனானிய பிரதமர் போவுட் சினிலோரா கோரிக்கை விடுத்துள்ளார்.

''இஸ்ரேலால் கடத்தப்பட்டது டோகோ கொடியுடன் கூடிய டாலி நிவாரண உதவிக் கப்பலாகும். லெபனானிய திரிப்போலி துறைமுகத்தில், காஸா மக்களுக்கு விநியோகிப்பதற்கான நிவாரண உதவிப் பொருள்கள் ஏற்றப்பட்டன. ஆயுதங்கள் ஏற்றப்படவில்லை'' என ஒரு லெபனானிய அதிகாரி குறிப்பிட்டார்.

''இக்கப்பலில் 50 தொன்கள் மருந்து வகைத் தொகுதிகள், உணவுப் பண்டங்கள், உடைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் ஆகியவையே

ஏற்றப்பட்டன. இதற்குப் பின்னர், செவ்வாய்க்கிழமை இக்கப்பல் காஸாவை நோக்கிக் கிளம்பியது'' என்றும் அவர் விவரித்தார்.

''இக்கப்பலில் எட்டு மனிதநேயப் பணித் தொண்டர்களும், ஊடகவியலாளர்களும் இருந்தார்கள். ஜெருசலேமின் முன்னாள் கிரேக்க - கத்தோலிக்க பேராயர் மொன்சிகனார் ஹிலாரியன் கெபுச்சியுமிருந்தார். அவர் பலஸ்தீன விடுதலை முன்னணியில் அங்கத்துவம் பெற்றிருந்தமைக்காக, 1970களில் இஸ்ரேலிய சிறையில் அடைக்கப்பட்டுமிருந்தார்'' என்றும் அவ்வதிகாரி கூறினார்.

''காஸாக் கரைக்கப்பால் 32கிலோமீற்றர்(19கடல்மைல்) தொலைவில் புதன்கிழமை மாலை இஸ்ரேலிய கடற்படைக் கப்பல், இக்கப்பலை குறுக்கிட்டு, இடைமறித்துத் தடுத்தது. அச்சமயம் இஸ்ரேலிய கடற் படை வீரர்கள் எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்தனர்'' என இப்பயண ஏற்பாட்டாளர் மயான் பஷுர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

''துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்ட பின்னர், இஸ்ரேலிய வீரர்கள் கப்பலுக்குள் புகுந்துவிட்டார்கள் என மாலுமிகளில் ஒருவர் எங்களுக்கு அறிவித்தார். இதற்குப் பின்னர் கப்பல் சிப்பந்திகளுடனான தொடர்பை நாம் இழந்துவிட்டோம். இன மறியாத பீதி எம்மை கௌவிக்கொண்டது'' என்றும் அவர் விவரித்தார்.

''இதற்குப் பின்னர் எமது கப்பலை இஸ்ரேலிய துறைமுகத்தை நோக்கித் திருப்புமாறு கப்பலோட்டிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அதேவேளை, இரு இஸ்ரேலிய இராணுவஹெலிக்கொப்டர்கள் எமது கப்பலை பின்தொடர்ந்து, வான் பரப்பில் வந்தன. அவையும் இடைக் கிடையே வேட்டுகளைத் தீர்த்தன'' என்றும் அவர் கூறினார்.

இக்கப்பலை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்ற குற்றச்சாட்டை இஸ்ரேலிய இராணுவம் மறுத்தது. ''இந்தச் சரக்குக் கப்பலை திசை திருப்பும் போதோ, அதில் துருப்புகள் ஏறும்போதோ துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை''என்றும் அது குறிப்பிட்டது.

இச்சம்பவம் குறித்து, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு ஈகுட் பராக் குறிப்பிடுகையில், ''காஸாவை நோக்கி வந்த இக்கப்பல், இஸ்ரேலிய கடற்படையினரால் எகிப்துக்குத் திசை திருப்பப்பட்டது. அது காஸாவுக்குச் செல்வதை நாம் தடுக்கிறோம் என்பதை மாலுமிகள் புரிந்து கொண்டார்கள். இதற்குப்பின்னர் எகிப்திலுள்ள எல்-எரிஷை நோக்கி அக்கப்பல் திருப்பப்பட்டது'' என்றார்.

''எகிப்திய கடல் எல்லைக்குள் பிரவேசித்த இக்கப்பல் அங்கிருந்து, காஸா கடற் பிராந்தியத்திற்குள் சாதுரியமாக நுழையும் போதே, இஸ்ரேல் கடற்படையினரால் தடுக்கப்பட்டு, இஸ்ரேலிய துறைமுகத்திற்குத் திருப்பப்பட்டது'' என்றும் அவர் இஸ்ரேலின் நிலைப்பாட்டை விளக்கினார்.

இஸ்ரேலிய இராணுவம் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில், ''இக்கப்பலின் மாலுமிகள் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இக்கப்பலில், மனிதநேய நிவாரண உதவிப் பொருள்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டால், அவை தரைமார்க்கமாகவே, காஸாவுக்கு அனுப்பி வைக்கப்படும்'' எனத் தெரிவித்தது.

அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்திலுள்ள பண்ணை ஒன்றில் பனியில் மாட்டிக் கொண்ட குதிரை இது. பெயர் 'பென்சில்'. பனிக்கட்டியால் உறைந்து போயிருந்த விளை நிலத்தில் நடந்தபோது, குதிரையின் பாரம் தாங்காமல் பனிக்கட்டி உடைந்து குதிரையை உள்ளே இழுத்துவிட்டது. உரிமையாளர் டோக் ஓல்டெஜ் ஓடோடி வந்து பனிக்கட்டிகளை உடைத்து செல்லக் குதிரையை மீட்கிறார்.

கையடக்க கணனி இயந்திரத்தை பயன்படுத்த ஹிலாரிக்குத் தடை

நியூயோர்க், பெப். 07

பிலாக்பெர்ரி சாதனம் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

கையடக்க கணனி போன்ற செயற்திறன் கொண்ட பிலாக்பெர்ரி சாதனத்தை தேர்தலுக்கு முன்னர் பராக் ஒபாமா பயன்படுத்தி வந்தார்.

ஆனால், ஜனாதிபதியான பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் பிலாக்பெர்ரியை பயன்படுத்ததடை விதிக்கப்பட்டது.

எனினும், ஒபாமா கேட்டுக்கொண்டதன் பேரில், பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த பிலாக்பெர்ரி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக விசேடமாக நவீன வசதிகள் கொண்ட பிலாக்பெர்ரி வடிவமைத்து தரப்பட்டுள்ளது.

தற்போது தானும் பிலாக்பெர்ரி பயன்படுத்தக் கூடாது என தடைவிதிக்கப்பட்டுள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கவலை தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 12 பேர் பலி; 15 பேர் படுகாயம்

பக்தாத், பெப். 07

''வட-கிழக்கு ஈராக்கிய மாகாணமான தியலவிலுள்ள ஹனாகுவின் நகரில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், 12 பேர் கொல்லப்பட்டனர்.15 பேர் காயமடைந்தனர். உணவகமொன்றிலேயே இத்தாக் குதல் இடம்பெற்றது'' என குர்திஷ் அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

''நான் உணவகத்தின் பின்புற மிருந்தேன். நுழைவாயிலுக்கருகில் பயங்கர ஓசையுடன் குண்டொன்று வெடித்தது. நான் அதிர்ச்சியடைந்தேன். அப்பகுதி நிர்மூலமாக்கப்பட்டு விட்டது'' என காய மடைந்தவர்களில் ஒருவரான யஹ்யா இப்ராஹிம் என்பவர் தெரிவித்தார். 35 வய தான இவர், ஒரு தொழில் நுட்பவிய லாளராவார்.

''கொல்லப்பட்டோரிலும், காயமுற்றோரிலும் பெரும்பாலானோர், உள்ளூர் சந்தைத் தொகுதியைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் இவ்வுணவகத்தின் நிரந்தர, கிரமமான வாடிக்கையாளர்களாவர்'' என்றும் இத்தொழில்நுட்பவியலாளர் குறிப்பிட்டார்.

''குர்திஷ்களே இக்குண்டுத்தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் நேரப்படி, பிற்பகல், 2.10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது'' என ஹனாகுயின் பிரதம பொலிஸ் அதிகாரி கேணல் அவுத் ஈஸா தெரிவித்தார். எனினும், இதர [illegible] விபரங்களை வெளியிடவில்லை.

பங்களாதேஷ் தீவிரவாதிகளுக்கும் மும்பைத் தாக்குதலில் தொடர்பு

பாகிஸ்தான் பத்திரிகை தகவல்

இஸ்லாமாபாத், பெப். 07

மும்பையில் நடைபெற்ற தாக்குதல்கள் சம்பவங்களில் பங்களாதேஷ் தீவிரவாத அமைப்புக்குத் தொடர்பு உண்டு என நம்பகமான தகவல்களை மேற் கோள் காட்டி பாகிஸ்தான் பத்திரிகையான 'டான்' வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அச் செய்தியில் மேலும் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:-

''மும்பைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்தியா அளித்த ஆதாரங்களை தொடர்ந்து பாகிஸ்தான் விசாரணை மேற்கொண்டது. தெற்காசியாவில் ஒருங்கிணைந்து செயற்பட்டுவரும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கு மும்பைத் தாக்குதலில் தொடர்புள்ளமை தெரிய வருகிறது.

''இதில் பங்களாதேஷை மையமாகக் கொண்ட ஹர்கத்-உல்-ஜிகாத்-அல் இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பு தாக்குதல் திட்டத்தை வகுத்ததோடு, தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கு பயிற்சியும் அளித்துள்ளது. அதற்கான ஆதாரங்களும் வலுவாக உள்ளன.

''மும்பைத் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணை தொடர்பான அறிக்கை விரைவில் வெளியிடப்படும் எனவும், இந்த வார இறுதிக்குள் ஆதாரங்களுடன் இந்தியாவிடம் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மும்பைத் தாக்குதல் தொடர்பான திட்டம் பாகிஸ்தானில் தீட்டப்படவில்லை என்று பிரிட்டனுக்கான பாகிஸ்தான் தூதுவஜித் ஷம்சுல் ஹசன் அண்மையில் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். அவர் இவ்வாறு கூறியமையை பாகிஸ்தான் பிரதமரும், வெளியுறவு அமைச்சரும் கண்டிருத்திருந்தனர்.

''இந்நிலையில், தாக்குதல் தொடர்பான திட்டம் துபையில் தீட்டப்பட்டுள்ளது என்றும் இந்தியாவிலுள்ள சில சக்திகள் இதற்கு துணை போயுள்ளன வென்றும் இத்தனை பெரிய தாக்குதலை இந்தியாவிலுள்ள சில சக்திகளின் ஆதரவு இல்லாமல் செய்திருக்க முடியாது என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

- இவ்வாறு அச்செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் வறட்சி காரணமாக நீரின்றி 40 இலட்சம் பேர் அவதி!

பீஜிங், பெப். 07

சீனாவின் வட, மத்திய பிராந்தியங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. ஏறத்தாழ, 40 இலட்சம் மக்கள் போதிய நீரின்றி பரிதவிக்கிறார்கள். இதனால், இப்பிராந்தியங்களில் சீன அரசால் பேரிடர் அனர்த்த நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொடிய வறட்சியால், 1 கோடி ஹெக்டெயர் (2கோடியே 40இலட்சம் ஏக்கர்) கோதுமை விளைச்சல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இது சீனாவின் குளிர்காலப் பயிர்ச் செய்கையில் ஏறத்தாழ அரைப் பங்காகும்.

வறட்சி நிவாரணப் பணிகளைப் பரவலாக மேற்கொள்ளுமாறு பிராந்திய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஹூ சின்டோவும், பிரதமர் வென் ஜியாபோவும் உத்தரவிட்டுள்ளனர். அத்துடன் நிவாரண உதவியின் பொருட்டு, 40 கோடி யுவான் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சீன வறட்சி நிவாரண சேவைச் செயலகம் இது குறித்துக் குறிப்பிடுகையில், ''சீன வரலாற்றிலேயே இத்தகைய கொடிய வறட்சி ஏற்படுவது மிக மிக அரிது'' என [illegible] தெரிவித்துள்ளது. சீனா வருடாந்தம் வறட்சிக்கும், வெள்ளப்பெருக்குக்கும் இலக்காகி வருகிறது. எனினும், சமீப காலங்களில் காலநிலை முற்றாக மாற்றமடைந்துள்ளது என காலநிலை ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

''பாதிப்புக்குள்ளாகி வரும் பிராந்தியங்களில் வறட்சி நீடிக்கலாம். 10 நாட்களுக்குப் பின்னர் மழை பெய்யக்கூடும். ஹீபி, ஷேங்ஸி, அன்குய், ஜியாங்சு, ஹெனான், ஷேன்டோங், ஷான்ஸி, கன்ஸு ஆகிய எட்டுப் பிராந்தியங்களே பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இவை கோதுமை விளைச்சல் பிராந்தியங்களாகும்'' என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழரை ஏமாற்றுகிறேனா?

முதல்வர் கருணாநிதி கேள்வி

சென்னை, பெப். 07

தமிழர் பாதுகாப்பு என்ற பெயரால், ஆதாயம் தேடிக்கொள்ள முயலுபவர்கள் யார் என்பதை உலகத் தமிழர்கள் நன்றாகவே உணர்வார்கள் - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து கேள்வி - பதில் வடிவில் நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

உலகத் தமிழர்களையெல்லாம் ஏமாற்றி காதில் பூச் சுற்ற முயற்சிப்பதாக ஒரு தலைவர் கூறியிருக்கிறார். உலகத் தமிழர்களை ஏமாற்றுகிறேனா இல்லையா என்பதை அவர்களே அறிவார்கள். உலகத் தமிழர்களுக்காக உழைப்பவர்கள் யார், தியாகம் செய்தவர்கள் யார், செய்பவர்கள் யார், வேடம் போடுபவர்கள் யார், தமிழர் பாதுகாப்பு என்ற பெயரால் ஆதாயம் தேடிக் கொள்ள முயலுபவர்கள் யார் என்பதையெல்லாம் உலகத் தமிழர்கள் நன்றாகவே உணர்வர்.

உலகத் தமிழர்களின் காதில் நான் பூச் சுற்றுகிறேன் என்று சிலர் சொல்வதால், அவர்களின் ஆத்திரம் எந்தளவுக்குப் பெருகியுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளத்தான் பயன்படுகிறது. என்னை எதுவும் பாதிக்கவில்லை.

தி.மு.க. செயற்குழுவில், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால், அது திருப்தி தருவதாகச் சொல்லியிருப்பார்கள். என்னைப் பொறுத்தவரை, அதற்கும் தயாராக இருப்பவன்தான்.

ஈழத் தந்தை செல்வாவின் மகன் சந்திர ஹாசன் எனக்கு எழுதிய கடிதத்தில் -

''தாங்கள் ஆட்சியில் இருப்பதால்தான் இலங்கையில் சிங்கள அரசு ஓரளவுக்கேனும் அடக்கி வாசிக்கிறது. உலகத் தமிழர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட முடிகிறது. தங்கள் உடல் நலத்தைப் போலவே, தமிழகத்தில் தங்களுடைய ஆட்சியும் நலமும், பலமும் பெற்றுத் தொடர வேண்டும்'' - என்று கூறியுள்ளார்.

மருத்துவமனையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உள்ளார்ந்த உணர்வோடு கருத்துத் தெரிவித்த தலைவர்கள், பதவி விலகவேண்டுமென்று கூறுபவர்கள் தாங்கள் அந்த இடத்தைப் பெறலாமா என்ற நப்பாசையோடு கூறுகிறார்கள்; அவர்களின் வலைகளில் விழுந்து விட வேண்டாமென்று எச்சரித்ததும்தான் அத்தகைய தீர்மானத்தை தி.மு.க. செயற்குழு நிறைவேற்றாததற்குக் காரணம். அதனால், ஏமாற்றமடைந்தவர்களுக்கு என் அனுதாபம்.

இலங்கைப் பிரச்சினையில் 58 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த முடிவைத்தான் தி.மு.க. தற்போதும் எடுத்துள்ளது என ஒரு தலைவர் கூறியுள்ளார்.

அதில் இருந்தே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இன்றோ நேற்றோ நான் அக்கறை காட்டவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது அல்லவா? பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த முடிவைத்தான் இப்போதும் எடுப்பதாகச் சொல்கிறார்கள். அதில் என்ன தவறு உள்ளது? இவர்கள் மனதைக் குளிர வைப்பதற்காக தி.மு.க. ஒரு முடிவை எடுக்க முடியுமா என்ன? - என்றுள்ளது.

மேலும், இலங்கைப் பிரச்சினைக்காக, தி.மு.க. மேற்கோண்ட பல்வேறு போராட்டங்களையும், நடவடிக்கைகளையும் கருணாநிதி அதில் பட்டியலிட்டுள்ளார்.

இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும் என்றும், இதனையெல்லாம் தமிழ் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. மீது களங்கம் கற்பிக்க நினைத்தால் அது நிச்சயமாக நிறைவேறாது என்றும் அதில் அவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஏற்படாதமை ஏன்?

கருணாநிதியிடம் விளக்கமளிக்க கோருகின்றார் டாக்டர் ராமதாஸ்

இலங்கையில் ஏன் போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பது குறித்து முதல்வர் கருணாநிதி தமிழக மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளித்த போதே அவர் இதைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போரை நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசு சார்பிலும், தமிழக அனைத்துக் கட்சிகள் சார்பிலும் ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதன் பிறகும் அங்கு போர் நிறுத்தம் ஏற்படவில்லை.

இதுவரை அங்கு போர் நிறுத்தம் ஏற்படாததற்கு என்ன காரணம் என்பதை கருணாநிதி விளக்க வேண்டும். தி.மு.க. தலைவர் என்ற முறையில் இல்லாமல், மாநிலத்தின் முதல்வர் என்ற வகையில் அவரிடம் இருந்து இதற்கான விளக்கத்தை தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மத்திய ஆட்சியில் பங்கு பெற்றுள்ள கட்சி என்ற முறையில் போரை நிறுத்துவதற்காக பல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டோம். பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரிடம் நேரிலும், கடிதம் வாயிலாகவும் வலியுறுத்தினோம். மேலும் தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் துணையாக நின்றோம்.

போரை நிறுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான முன்முயற்சியை கருணாநிதி எடுக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தினோம். 7 கோடி தமிழர்களுக்கு முதல்வர் என்ற முறையிலேயே அவரை முன்னிறுத்தி முடிவுகள் எடுக்கப்படவேண்டும் எனக் கூறினோம்.

ஆனால் மத்திய அரசுக்கும், தி.மு.க. வுக்கும் இடையே விரோதத்தை உண்டாக்கவும், அதன் மூலம் மத்தியில் நான் செல்வாக்குச் செலுத்த முயன்றேன் என கருணாநிதி கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

மேலும் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க சதி எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 35 சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஆதரவுள்ள நிலையில் ஆட்சியைக் கலைக்க எவ்வாறு சதி செய்ய முடியும் என்பதையும் கருணாநிதிதான் விளக்க வேண்டும் - என்றார்.

இலங்கையில் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி சென்னையில் சட்டத்தரணிகள் நடத்திய தொடர் உண்ணாவிரதத்தில் வைகோ பேசும்போது.....

ஈழத் தமிழரின் பிரச்சினையில் விரைவில் அடுத்த கட்டப் போர்

வைகோ அறிவிப்பு

சென்னை, பெப்.07

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான அடுத்த கட்டப் போராட்டம் பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் - என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழருக்காக போராட்டம் நடத்தி, பொலிஸாரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சட்டத்தரணி புகழேந்தியை நேற்றுமுன்தினம் சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறிய போதே இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சட்டத்தரணி புகழேந்தி மனித உரிமை மீறல்களுக்காகப் போராடி வருபவர். பொலிஸார் அவர் மீது காழ்புணர்ச்சியுடன் தாக்கியுள்ளனர்.

அவருடைய தலையில் ஏற்பட்டுள்ள காயம், சற்று ஆழமாகப் பட்டிருந்தால் அவர் சுயநினைவு இழக்க நேரிட்டிருக்கும். மேலும் 2 சட்டத்தரணிகள் மீதும் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கான போராட்டத்தை சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள் முன்னெடுத்து செல்கின்றனர். இலங்கையில் போரை நிறுத்த சொல்லி ஐ.நா.சபை, போப் ஆண்டவர், ஹிலாரி கிளிண்டன் மற்றும் உலகநாடுகள் அனைத்தும் வலியுறுத்தியுள்ளது. ஆனால் இந்தியா மட்டும் ஒப்புக்காகக் கூட போரை நிறுத்த சொல்லவில்லை.

இந்திய அரசின் துரோகத்தை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். ஈழத்தமிழர்களுக்கான அடுத்த கட்டப் போராட்டம் குறித்து இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் - என்றார்.

ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்துவரும் கம்யூ. பாண்டியனின் கார் நேற்றுத் தீக்கிரை!

சென்னை, பெப். 07

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வரும் இந்தியக் கம்னிஸ்ட் கட்சியின் மாநில செயலர் தா.பாண்டியனின் கார் சில விஷமிகளால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் சென்னை அண்ணா நகரிலுள்ள அவரது வீட்டின் முன்னால் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி உடனடியாக அருகிலுள்ள தீய ணைப்பு நிலையத்துக்கு தெரு காவலாளி தகவல் கொடுத்தார். உடனே பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, காரில் பற்றிய தீயை அணைத்தனர். இருப்பினும் காரின் பின் பகுதி முழுவதும் தீயில் எரிந்து நாசமானது. பின்பக்க இருக்கைகளும் தீயில் கருகின. அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் தீயில் எரிந்து நாசமானது.

பின்னர் காரை தடயவியல் நிபுணர்கள் முழுமையாக ஆய்வு செய்தனர். கை ரேகை நிபுணர்களும் வரவழைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலையில் காட்டுத்தீ போல பரவியது. உடனடியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் அவரது வீட்டின் முன்பு கூடினர்.

பின்னர் வீட்டின் அருகே அம்பத்தூர் வீதியிலுள்ள இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் திடீர் வீதி மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் தா.பாண்டியனின் காருக்கு தீ வைத்தவர்களை உடனடியாகக் கைது செய்யவேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

கட்சியின் மாவட்ட செயலாளர் பாண்டியன், முன்னாள் எம்.எல்.ஏ. கண்ணன், மாவட்ட துணை செயலாளர் சம்பத், லெனின் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இத்தீவிபத்து தொடர்பாக கார் சாரதி ராஜி கொடுத்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, இத்தீவிபத்திற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு தா.பாண்டியனின் வீட்டுக்கு காவல்துறை பாதுகாப்பு அளிக்க முன்வந்தபோதும் பாதுகாப்பு வேண்டாம் என மறுத்து விட்டார். இச்சம்பவத்திற்குப் பிறகு தற்போது தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலையான தமிழக மீனவர் 22 பேர் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைப்பு

இராமேஸ்வரம், பெப். 07

இலங்கைச் சிறையிலிருந்து விடுதலையான 22 தமிழக மீனவர்கள், இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த விவரம் வருமாறு-

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 4 மீனவர்கள் ஒரு விசைப்படகிலும், தஞ்சாவூர் அருகே உள்ள மல்லிப்பட்டினத்திலிருந்து 18 மீனவர்கள் 5 நாட்டுப்படகுகளிலும் கடந்த மாதம் 23 ஆம் திகதி நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களை எல்லைதாண்டி வந்தனர் எனக் கூறி பிடித்துச்சென்றுவிட்டனர்.

பின்னர் அவர்கள் இலங்கை கடற்படையினரால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, அங்குள்ள நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். பின்னர் 22 தமிழக மீனவர்களையும் யாழ்ப்பாணம் சிறையில் அடைந்தனர்.

இந்த நிலையில் கடந்த 3ஆம் திகதி 22 மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவையடுத்து நேற்று முன்தினம் அவர்களை படகுகளுடன் இலங்கை கடற்படையினர் அழைத்து வந்து இந்தியக் கடல் எல்லையில்வைத்து இந்திய கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் தொடரும் மனிதப் பேரவலங்களை உடனடியாக நிறுத்துமாறு கோரி புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் கவன ஈர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். நேற்று முன்தினம் வியாழக்கிழமை கனடாவில் ஒட்டாவா நகரிலும் நேற்று வெள்ளிக்கிழமை ஜேர்மனியின் பேர்ளின் நகரிலும் நடைபெற்ற கவன ஈர்ப்புப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை

ஐ.பி.எல். போட்டித் தொடருக்கான ஏலத்தில் பீற்றர்சன் -பிளின்ரொப்புக்கு அதிக விலை



பனாஜி, பெப்.07

இரண்டாவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகள் வருகின்ற ஏப்ரல் 10ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகின்றன. முதலாவது போட்டிகளில் பங்கேற்காத வீரர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஏலம் விடப்பட்டார்கள். கோவாவில் இந்த ஏலத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவுஸ்திரேலியாவில் இருந்து 18 வீரர்கள், இங்கிலாந்தில் இருந்து 7 வீரர்கள், 5 இலங்கை வீரர்கள், 3 நியூஸிலாந்து வீரர்கள், 7 தென்னாபிரிக்க வீரர்கள், 6 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள், 4 பங்களாதேஷ் வீரர்கள் என்று மொத்தம் 50 வீரர்கள் ஏலத்திற்கு தயாராக இருந்தனர்.

இந்த 50 வீரர்களிலிருந்து 17 வீரர்கள் மட்டுமே அணிக்கு தேவைப்படுகின்றனர். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு 3 வீரர்கள் தேவை. இதற்காக அவர்கள் அதிகபட்சமாக 2 மில்லியன் அமெரிக்க டொலர் வரை செலவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதே போல் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு 3 வீரரும், ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகளுக்கு தலா 2 வீரர்களும், கொல்கத்தா நைட் ரைடர்ஸுக்கு ஒரு வீரரும் வாங்கப்பட உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்களான பிளின் ரொப், பீற்றர்சன் ஆகியோர் மிகவும் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் தலா 15 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஐ.பி.எல். போட்டிகளிலேயே அதிக விலைக்கு வாங்கப்பட்டவர்கள் பீற்றர்சனும் பிளின் ரொப்பும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இடம்பெற்ற ஐ.பி.எல்.வீரர்கள் ஏலத்தில் 50 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு முதற்கட்ட விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் இளம் வேகப் பந்துவீச்சாளர் மஷ்ரபி மோட்ரஷா 6 லட்சம் டொலருக்கு ஏலம் போனமை பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி மோட்ரஷாவை வாங்கியிருக்கிறது.

தென்னாபிரிக்க அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் டுமினியை 9 லட்சத்து 50 ஆயிரம் டொலருக்கு மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியிருக்கிறது. ஏலப் பட்டியலில் இருந்த அவுஸ்திரேலிய உப அணித்தலைவர் மைக்கல் கிளார்க் கடைசி நேரத்தில் நேற்றுமுன்தினம் விலகினார்.

பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க பாகிஸ்தான் அரசு அனுமதி மறுத்துள்ளது. எனவே அந்த வீரர்களுடன் ஒப்பந்தத்தை சம்பந்தப்பட்ட அணிகள் முடித்துக்கொள்ளவோ அல்லது தற்காலிகமாக நீக்கம் செய்யவோ முடியும் என்றும் மோடி கூறினார். இந்த ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஆட்டம் சமநிலையில் முடிந்தால் முடிவை அறிய ஒரு ஓவர் முறை கடைபிடிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

மிஷ்ராவுக்கு பாராட்டு

சென்னை, பெப்.08

இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமீத் மிஸ்ரா சிறந்த முறையில் பந்து வீசுகிறார் என அவுஸ்திரேலிய சுழற்பந்து பயிற்சியாளர் டேவிட் ஜென்னர் கூறியுள்ளார்.

உலக புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்னின் பயிற்சியாளரான டேவிட் ஜென்னர், சென்னையில் உள்ள மேக் ஸ்பின் பயிற்சி நிலையத்தில் பயிலும் இளம் வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அங்கு சென்றுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர்கள் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதே அவர்களது திறமை மேம்பட உதவும் என்று கூறிய அவர், அதற்கான வாய்ப்புக் குறைந்து வரு வதாகவும் தெரிவித்தார்.

அணித்தலைவர்கள் ஒட்டங்களைக் கொடுக்காமல் கட்டுப்படுத்தவே விரும்புவதால் சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமீத் மிஸ்ரா சிறப்பாக பந்து வீசினார் எனக் கூறிய அவர், இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ், ஒரே விதமாகவே பந்து வீசி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

இந்தியக் களத்தடுப்பாளர்கள் மீது கற்கள் வீசப்பட்டதால் பரபரப்பு!

கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் போது, இலங்கை ரசிகர்கள் சிலர் மோசமாக நடந்து கொண்டனர். எல்லைக்கோட்டிற்கு அருகே களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்திய வீரர் பிரைக்யான் ஓஜா மீது யாரோ சிலர் ஒரு சிறிய கல்லை தூக்கி எறிந்துவிட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் உடனடியாக அணித்தலைவர் தோனியின் கவனத்திற்குக் கொண்டு சென்றார். இதையடுத்து இந்திய வீரர்கள் விளையாட மறுத்து உடனடியாக களத்தை விட்டு வெளியேறினார்கள். அப்போது இலங்கை அணி 17.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 108 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து போட்டி நடுவர் கிறிஸ் பிராட் மற்றும் நடுவர்கள், இலங்கை வீரர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் மைதானத்தில் ஆலோசனை நடத்தினர். டோனியும் நடுவர்களிடம் விவாதித்தார். இதில் பிரச்சினைக்குரிய பகுதியில் கூடுதல் பொலிஸாரை நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் பின்னர் ஆட்டம் தொடர்ந்தது.

ஒரு சில இலங்கை ரசிகர்களின் ஒழுங்கீனமான நடத்தையால் ஆட்டம் 22 நிமிடங்கள் பாதிக்கப்பட்டது. முன்னதாக கொழும்பில் நடந்த இரண்டாவது ஆட்டத்தின்போது இந்திய வீரர் இஷாந்த் சர்மா மீது இலங்கை ரசிகர்கள் கல் எறிந்தமையால் சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டது.

அவுஸ்திரேலிய அணிக்கு தொடர்ந்தும் தோல்வி

6 விக்கெட்டுகளால் நேற்று நியூஸிலாந்து வெற்றி

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றியிட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, தனது ஐம்பது ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்கிய மைக்கல் கிளார்க் 133 பந்துகளில் 98 ஓட்டங்களைப் பெற்றார். டேவிட் ஹஸி 75 ஓட்டங்களைப் பெற்றார். அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது. எனினும், கிளார்க், ஹஸி ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 133 ஓட்டங்களைப் பெற்று அணியை ஸ்திரப் படுத்தியது.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணியின் ஓபிரெயன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 48.5 பந்துகளில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

நியூஸிலாந்து அணி சார்பில் ஜீ.டீ. எலியட் ஆட்டமிழக்காமல் 75 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றார்.

மக்கலம் 43 ஓட்டங்களையும், ரெயிலர் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்த போட்டியிலும் வெல்வோம்!

தோனி நம்பிக்கை

கொழும்பு, பெப். 07

இலங்கையில் நேற்றுமுன்தினம் நடந்த 4ஆவது ஒருநாள் போட்டியிலும் இந்தியா 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 4:0 என்ற கணக்கில் இந்தியா உள்ளது. இது மட்டும் அல்லாமல் இந்தியா 9 ஒரு நாள் போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று சாதனை படைத்துள்ளது.

வெற்றி குறித்து அணித்தலைவர் தோனி கூறியதாவது:- தொடர்ந்து 9ஆவது வெற்றியை பெற்று இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்னும் ஒரு வெற்றியையும் பெற்றால் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும். எனவே இலங்கையுடன் நடக்கும் 5ஆவது போட்டியிலும் வெல்ல வேண்டும் என்று லட்சியத்தோடு இருக்கிறோம்.

நான் சதத்தை தவறவிட்டமை வருத்தமாக இருந்தது. ஆவேசத்தோடு விளையாடும்போது எது வேண்டுமானாலும் நடக்கும். அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். பொதுவாக நான் 3 ஆவது வீரராக களமிறங்குவது இல்லை. இர்பான் பதான் ஆட வந்ததால் நான் 3ஆவது வீரராக இறங்கினேன். நான் 3ஆவது வீரராக இறங்க வேண்டிய கட்டாயம் இருந்தது'' - இவ்வாறு தோனி கூறினார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய வீரர்கள் சிறப்பான ஆட்டம்

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

ஜமைக்காவின் சபீனா பார்க் மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்டில் இரண்டாவது நாளான நேற்று மேற்கிந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அணித் தலைவர் கிறிஸ் கெயில் 71 ஓட்டங்களையும் சர்வான் 74 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இருவரும் இணைப்பாட்டமாக 150 ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

போட்டியின் இரண்டாவது நாளான நேற்று, 5 விக்கெட்டுக்கு 296 ஓட்டங்கள் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி மேலதிக ஓட்டம் எதனையும் பெறாமல் பிளின்ரொப்பின் (43) விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து அந்த அணி 318 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்திய அணி சார்பாக [illegible] விக்கெட்டுக்களையும், ரெயிலர் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து உடனடி விசாரணைக்கு பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, பெப். 7

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் மருத்துவமனைகள், பொது மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கையிடம் கோரியுள்ளார்.

''மருத்துவமனை மீதான தாக்குதல்கள் குறித்து இலங்கை அதிகாரிகள் வெளியிட்டுள்ள கருத்துகளை ஏற்க முடியாது. விடுதலைப் புலிகளின் பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது என இலங்கை அரசு தெரிவித்துள்ளமை கவலையளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதி வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்கள் அமைச்சர் பில் ரம்மெல் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட விவாதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான யுத்த நிறுத்தத்திற்கு மனிதாபிமான அரசியலே மிகவும் முக்கியமானது எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் தற்போதைய நிலவரம் அதிர்ச்சி ஏற்படுத்துவதாகவுள்ளது. அங்குள்ள மனிதாபிமான, மனித உரிமை நிலவரம் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

நாட்டின் வட பகுதியில் மனிதாபிமான நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

அரசு பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே மோதல்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த ஞாயிற்றுக் கிழமை, தாக்குதல் தவிர்ப்பு பகுதியாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனை மூன்று தடவைகள் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது.

இவ்வாரம் மேலும் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நாளும் பொது மக்களின் இழப்புகள் அதிகரித்து செல்கின்றன.

மருத்துவமனைகள் தாக்கப்பட்டமை சர்வதேச மனிதாபிமான சட்டங்களை கடுமையாக மீறும் செயலாகும்.

இதனை நியாயப்படுத்துவதற்கு இலங்கை அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் எந்த முயற்சிகளும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும்.

இலங்கை அரசு தனது படைகளின் துஷ்பிரயோகங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கிறோம் - வலியுறுத்துகிறோம்.

மருத்துவமனை மீதான ஷெல் தாக்குதல் மற்றும் பொது மக்கள் உயிரிழப்புகள் குறித்து விசாரணைகளுக்கு பிரிட்டிஷ் தனது முழுமையான ஆதரவை வழங்கும் - என்றார்.

(அ-சி)

கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ [illegible] இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக [illegible] றது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டோர் ''யுத்த அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுங்கள்'', ''எமக்குத் தேவை சமாதானம் மட்டுமே'', ''மக்களை மக்களாக நடத்துங்கள்'' போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(அ-சி)

ஆயுதங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ ரீதியாக வெற்றிகொள்ள முடியாது என்பதை விடுதலைப்புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அமைதியான முறையில் அரசியல் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும்.

போரை நிறுத்துவதற்கு புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு கொழும்புடன் இணங்கிப் போகவேண்டும் என்பதையே நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா இணைந்த இணையத் தலைமை நாடுகள் கடந்த செவ்வாய் கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையிலும் வெளிப்படுத்தியிருந்தது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1)

தைப்பூசத்தில் அன்று பயிற்சி ஆரம்பம்

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C''
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
DIPLOMA IN WEB DESIGNING

3000/= உடன் தீபாவளி மற்றும் வருடப் பிறப்பு ஓர் சிறப்பு சலுகை

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள்

GIT (G.C.E. A/L),
ICT (Grade10,11)
English & Tamil Medium
Course Fees (Monthly 300/=)
ஆசிரியர் :- திரு.சி.பிரணவன்
Kids Programming (Grade 2-10)
Online Classes
Fiwe;j ft;izk;
$oa Neu nra;Kiwg;gapw;rp
mDgtk; tha;e;j tphpTiuahsHfs;
mq;fPfupTfg;gl;l rHtNjr rhd;wpjy;.
பயிற்சி ஆரம்பம் 08.02.2009

Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170

வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நேற்று பிற்பகல் 12 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சிறுவர்களான சகோதரர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல, தேவிபுரம் ஆற்றங்கரைப் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்களின் குடிசைகள் மீது நேற்று நடத்தப்பட்ட ஆட்லெறி ஷெல் மற்றும் பல்குழல் தாக்குதல்களில் 2 பேர் பலியானதுடன் 22 பேர் காயமடைந் துள்ளனர்.

முல்லைத்தீவு சுதந்திரபுரம் வீட்டுத் திட்டம் மீது நேற்று பிற்பகல் 4.35 மணியளவில் நடத்தப்பட்ட ஆட்லெறி மற்றும் பல்குழல் மற்றும் பீரங்கித் தாக்குதலில் 6 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 75 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட ஆட்லெறி மற்றும் பல்குழல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு உடையார்கட்டு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 8 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட ஆட்லெறி, பல்குழல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 14 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மூங்கிலாறு, உடையார்கட்டு, வன்னிபுனம் ஆகிய மூன்று இடங்களிலும் நடந்த தாக்குதல்களில் மட்டும் மொத்தமாக 64 பேர் காயமடைந்துள்ளனர் - என்றுள்ளது.

புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச சமூகத்தின் மத்தியில் பயப் பிராந்தியை ஏற்படுத்தும் வகையில், மோதல் பகுதிகளின் தேவைகளுக்கென முப்பத்தையாயிரம் பிரேதப் பைகளை வாங்க செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது என அரசின் பாதுகாப்பு பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

வழமை போன்று தாம் பிரேதப் பைகளை வாங்கியதாகக் கூறுகின்ற செஞ்சிலுவைச் சங்கம், ஆனால் தாம் வாங்கிய பைகளின் எண்ணிக்கைக்கும், அரசு கூறும் எண்ணிக்கைக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது எனக் கூறியுள்ளது.

கொழும்பிலுள்ள தமது அலுவலகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கல் வீசித் தாக்கப்பட்டது எனவும், தமது அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறது என அவர்கள் குற்றஞ்சாட்டினர் எனவும் செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

அதேவேளை, வடபகுதி மோதல்களில் அகப்பட்டுள்ள இரண்டரை லட்சம் மக்கள் உணவு நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் என உலக உணவுத்திட்டம் எச்சரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடுப்பகுதிக்கு பின்னர் அங்கு உணவு வாகனங்களை தம்மால் அனுப்ப முடியாமல் இருக்கிறது எனவும் உலக உணவுத்திட்டம் கூறியுள்ளது.

வன்னி மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்குமிடையில் புதுடில்லியில் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது இந்த விடயம் குறித்து கலந்துரையாடியதாக செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இந்த உரை யாடல்பற்றித் தெரிவித்துள்ள பான்கி மூன் பெரும் எடுப்பில் மக்கள் சிக்குண்டுள்ள குறுகிய ஒரு நிலப்பரப்பில் நடைபெறுகின்ற இந்த மோதல்களால் பாரிய மனித அவலங்கள் இடம்பெறக்கூடிய நிலைமை காணப்படுகிறது. அதனால் இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துவதற்கு உலகம் செயற்பட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

பெரிய மனித அவலம் ஏற்படு வதற்கு முன்பதாக மோதல்கள் கட்டாயம் நிறுத்தப்படவேண்டும். கால தாமதமின்றி அவ்வாறு நடந்து கொள்ளும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளை ஐ.நா.வும் மற்றவர்களும் வற்புறுத்தி வருகின்றோம் - என்றார்.

இந்தப் பிணக்குக்கான இறுதித் தீர்வு அரசியல் கட்டமைப்பிற்குள்ளேயே காணப்படவேண்டும் என்று நம்புவதாகவும் இதனுடன் தொடர்புடைய காரணங்கள் மற்றும் நியாயபூர்வமான குறைபாடுகளைத் தீர்க்கும் விதமாக தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் என்றும் பான் கீ மூன் கூறினார்.

ஐ.நாவின் நிலைப்பாட்டுகளுடன் இந்திய நிலைப்பாட்டுக்கு மிக நெருக்கமாகவே உள்ளது என்றும், இலங்கைப் பிரச்சினை முகர்ஜியுடன் விரிவாக ஆராயப்பட்டதாகவும் போரில்சிக்குண்டுள்ள பொதுமக்களை ஆபத்தின்றி வெளியில் கொண்டு வருவதற்காக இந்தியாவும் ஐ.நா.வும் கூட்டாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ப)

Microsoft
Systems Engineer MCP - MCSE
A+ (ComTIA Hardware Technician-AUSTRALIA)
கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
Rs.16000 DISCOUNT 09.01.2009 வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.02.2009 07.00AM/12.00PM
Become an Engineer
விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

இன்று தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக எண்ணிக்கையில் வரவேண்டும் - என்று தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி 7, 8 மற்றும் 9ஆம் திகதிகளில், இலங்கை தமிழர் நல உரிமைப் பேரவை என்ற அமைப்பின் பெயரால் அனைத்துக் கட்சியினர் கலந்து கொள்ளும் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடக்கின்றன. அதன்படி, தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை என்ற அமைப்பின் பெயரால் மாவட்டந்தோறும் நடக்கும் பேரணிகள், பொதுக் கூட்டங்களில் இளைஞர் அணியினர் அதிக எண்ணிக்கையில் பங்கேற்று தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (சி)

கோத்தபாய,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு கீழ் பணியாற்றும் பாதுகாப்புப் படையினர் செய்த இன அழிப்புக் கொலைகளை, பாதுகாப்புச் செயலாளரும், இராணுவத் தளபதியுமே உத்தரவிட்டுச் செய்வித்தார்கள் என்பதால், அவர்களே அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று வழக்குத் தொடருநரான புறூஸ் பெயின் தமது மனுவில் - குற்றப் பத்திரிகையில் - குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவரங்களை புறூஸ் பெயின் அசோசியேட்ஸ் நிறுவனம் நேற்று வாஷிங்ரனில் வெளியிட்டது.

இலங்கையின் பன்னிரெண்டு மாவட்டங்களில் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் (சம்பந்தப்பட்ட இருவரும் தமது அரசாங்கப் பதவிகளை பொறுப்பேற்ற நாள் தொடக்கம்) வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நாள் வரை இடம் பெற்ற சட்டத்துக்கு முரணான 3,750 கொலைகளுக்கும் 10,000 பேர் உடல் ரீதியான உபாதைகளுக்கு ஆளாவதற்கும் 13 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அவலப்படுவதற்கும் இவர்கள் இருவருமே காரணமானவர்கள், பொறுப்பாளிகள் என்றும் - மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த எண்ணிக்கைகள், முன்னாள் யுகோஸ்சிலேய ஜனாதிபதி ஏற்படுத்திய இடப்பெயர்வுகளினால் கொசோவாவில் உண்டான இன அழிப்பு எண்ணிக்கையை விட மிகவும் அதிகமானதாகும் எனவும் மனுவில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தினால் 2007 ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இன அழிப்பு பொறுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் முதலாவது வழக்கு இதுவாகும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜை என்பதாலும் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்கா 'கிறீன் காட்' பெற்றவர் என்பதாலும் அவர்கள் மீது அமெரிக்காவில் வழக்குத் தொடர முடியும் என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இன அழிப்புக்கு எதிரான தமிழர் இயக்கம், தமிழர் சட்ட பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் சார்பிலேயே புறூஸ் பெயின் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார். (அ)

தரம்- 5
புலமைப் பரிசில்-2009
பயிற்சிப் பரீட்சை-4
தரம்- 4
புலமைப் பரிசில்-2010
பயிற்சிப் பரீட்சை-2
(நாவலர் வெளியீடு)
ஆரம்பம்: 08.02.2009
ஞாயிறு காலை 8.30/2.30
*வெளி மாணவர்களும் தோற்றலாம்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

HOME PC - 1
Intel 1.2Ghz Celeron
Intel MotherBoard
40GB Sata Harddisk
1GB DDR11 Ram
Samsung Dvd Writer
ATX Black Casing
15" LCD Monitor
Keyboard
Optical Mouse
Speaker
Free:Pendrive, Mousepad & duestcover
Rs 37,000/=

HOME PC - 2
Intel 2.0Ghz Dualcore
Biostar / MSI MotherBoard
160GB Sata Harddisk
1GB DDR11 Ram
Samsung Dvd Writer
ATX Black Casing
15" Lcd Monitor
Keyboard
OpticalMouse
Speaker
Free:2GB Kingston Pendrive, Mousepad & duestcover
Rs 44,000/=

HOME PC - 3
Intel 2.2Ghz Dualcore
Asus /Foxconn Motherboard
160 GB Sata Harddisk
1GB DDR11 Ram
Samsung Dvd Writer
ATX Black Casing
17" Lcd Monitor
MultimediaKeyboard
Optical Mouse
Speaker
Free:2GB Kingston Pendrive, Mousepad & duestcover
Rs 48,500/=

PROFESSIONAL PC - 1
Intel 2.2Ghz Dualcore
Intel DG31 Motherboard
160GB Sata Harddisk
2GB DDR11 Ram
Sony Dvd Writer
ATX Black Casing
17" Lcd Monitor
MultimediaKeyboard
Optical Mouse
Speaker
Free:2GB Kingston Pendrive, Mousepad & duestcover
Rs 52,000/=

PROFESSIONAL PC - 2
Intel 2.53Ghz Dualcore
Intel DG31 Motherboard
250GB Sata Harddisk
2GB DDR11 Ram
Sony Dvd Writer
ATX Black Casing
17" Lcd Monitor
MultimediaKeyboard
Optical Mouse
Speaker
Free:4GB KingstonPendrive, Mousepad & duestcover
Rs 55,500/=

MUSIC WORLD & COMPUTERS
141B,பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021-222-6554
கணனி கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும
*UPS - 5,700/=
*Modem 700/=
* 512mb Pciexpress Vga Card - 5,600/=
Warrenty Vaild 1 - 3 Years
Vaild For One Week

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.